தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

[illegible] | இதழ் — 5

...நீலன்ர கொலைக்கு கிளின்ரனும், சந்திரிகாவும், வீர விதான இயக்கமும் அதிர்ச்சியும் கண்டனமும் தெரிவித்ததெண்டு சொன்னா, அவரும் அவரோட திறமையும் யாருக்கு பயன்பட்டிருக்கு? நாமலும் ஏன் இந்த கூத்தில சம்பந்தபடனும்..?

# வன்னியில் அரசின் போர்க்குற்றம் !

பிணிக் கொடுமைகளுக்கும் பட்டினிச் சாவின் விளிம்புக்கும், தள்ளப்பட்டுள்ளனர் வன்னி மக்கள். தமது அடிப்படை வாழ்வுரிமைக்காக வன்னி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இம்மக்களுக்காக யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் யாழ் உயர் வகுப்பு மாணவர்களும் இராணுவத்தின் அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் போராட்டம் நடாத்தியுள்ளனர். வன்னி மக்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வன்னிப் பிரதேசத்துக்கு வெளியே சிகிச்சைக்காக எடுத்துச் சென்று கொண்டிருக்கின்றனர்.

இந்த அவல நிலை இயற்கையாய் வந்தவையல்ல. செயற்கையாக மிகவும் திட்டமிடப்பட்டு சிங்கள அரசினால் ஏற்படுத்தப்பட்டது. அரசு இழைத்த போர்க் குற்றங்களில் பொருளாதாரத் தடையும் ஒன்றாகும்.

இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பசி பிணி என்பவற்றுக்கு "இரங்கும்" வல்லரசுக் கூட்டங்கள் வன்னி மக்களின் பிரச்சனை ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் என்பதைக் கூட கணக்கில் கொள்ளாது. நமது விடயத்தில் மட்டும். ஆழ்ந்த மௌனம் சாதிக்கின்றன.

ஒரு தசாப்தமாக தொடர்ச்சியாக பொருளாதாரத் தடை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈழத் தமிழர் மீது விதிக்கப்பட்டுள்ளது. நியாயமான தமது விடுதலைக்காகப் போராடும் ஒரு தேசத்தை கூட்டாகத் தண்டிக்கும் குரூரமான எத்தனிப்பு இதுவாகும். இவ்வாறு தண்டிப்பதன் மூலம், தேசிய கோரிக்கைகளைக் கைவிடும்படி மக்களை நிர்ப்பந்தித்து அடிபணியச்செய்து விடலாம் என நீண்டகாலமாக சிங்கள அரசு முயற்சித்து வருகின்றது. இப்படிப்பட்ட அரசை நமது தரப்பில் போராட்டத்தைக் கைவிட்ட தமிழ் அமைப்புகள், நிபந்தனையின்றி ஆதரிப்பது என்பது தனியான விடயம்.

பிணிகளின் பெருக்கமும் பட்டினிச் சாவுகளும், நீண்டகாலமாய் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். இதற்கான மாற்று ஏற்பாடுகளை விடுதலைக்காகப் போராடும் ஒரு தேசம், தானே கண்டறியாது, நீண்டகால தயாரிப்புகளுக்கான திட்டங்களைக்கொண்டிராது எதிரிகளின் கைகளை எதிர்பார்ப்பதும், இறைஞ்சுவதும், எமது பக்கத் தவறு. எதிரிகளின் இப்படியான கூட்டுத் தண்டனைகளை, தேசம், தனது சொந்தப் பலத்திலும், சக தேசங்களின் ஆதரவிலும் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும்.

விடாப்பிடியாகப் போராடும் ஒரு தேசத்தின், போரிடும் ஆற்றலை முடக்கும் எதிரிகளின் பல் வடிவத் திட்டங்களில் பொருளாதாரத் தடையும் ஒன்று எனின் அதனை முறியடிக்கவும், மாற்றுத்திட்டம் இன்றியமையாதது. நீண்ட தொடர்ச்சியான போராட்டத்துக்கு தேசத்தின் அடிப்படை இருப்பு அவசியம் என்பதை வேறு எவரையும் விட போராட்டத்தை தலைமை தாங்கி நடத்துபவர்களாகிய[illegible] கடமையாகும்.

முன்நிபந்தனையாக எந்தவொரு போராட்டமும் மக்களின் பலத்தில் நடைபெற வேண்டும். ஒரு பிரதேச மக்களை தனிமைப்படுத்தி பலவீனப்படுத்த முடியாத விதத்தில் நம் தேசம் முழுவதும், அதற்குப் பக்கபலமாக

(தொடர்ச்சி 07இல்)

## கொழும்பில் தொடரும் தமிழர் வேட்டை!

பத்திற்கு மேற்பட்ட தற்கொலைப் போராளிகள் கொழும்பில் உலவுவதாகவும் முக்கிய அரசியல் இராணுவ தலைவர்களை இலக்காக கொண்டுள்ளதாகவும் இதனால் இத்தலைவர்களின் உத்தியோகபூர்வ நடமாட்டங்கள் கூட கணிசமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் "கொன்பெரன்ஸ்கள்" பல நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அனைத்தும் உசார் படுத்தப்பட்டுள்ளதாகவும் படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வழிமுறைகள் மூலம் தமிழர் வேட்டை தொடக்கி வைக்கப்பட்டுள்ளதற்கான முன்னறிவிப்பு என்பதை முதலில் புரிந்து கொள்வோம். வீடுகளில் புகுவதும் ஆட்களை இழுத்துச்செல்வதும் பாதைகளில் கைதுகளும் சிறை வைப்புகளும் பணப்பறிப்புகளும் தீவிரமடைவதற்கு முன்னறிவிப்பு செய்தாகி விட்டது. தமிழரின் எச்சசொச்ச நடமாடும் சுதந்திரம், தொழில் புரியும் சுதந்திரம், குடியிருப்பு சுதந்திரம் யாவும் படையினரின் கைகளுக்கு சென்று விட்டன.

தமிழர் மீது அட்டூழியங்களும் அடாவடித்தனங்களும் அதிகரித்து விட்டதாக உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் கண்டனங்களும் அழுத்தங்களும் அதிகரிக்கும் போது, தொல்லை தவிர்ப்பு குழு மீண்டும் உயிர்ப்பிக்கப்படும். மறுபடியும், மறுபடியும் மக்கள் கைது செய்யப்படுவதை தவிர்க்க காவல் நிலையங்களை கணனி மயப்படுத்தப் போகின்றோம், விவரங்களை பத்திரப்படுத்தப்போகின்றோம் என்கிறார்கள். கைது செய்து விடுவிக்கப்பட்டவர்களை மீண்டும் ஏன் கைது செய்கின்றீர்கள் எனக்கேட்டால் அதற்கு பிறகு "பயங்கரவாதிகளாக" மாறியிருந்தால் என்ன செய்வது? என்று எம்மை திருப்பிக்கேட்கின்றார்கள். அவர்கள் பண்ணும் சித்திரவதைகளுக்கு, மாறாமல் என்ன தான் செய்வதாம்.

தமிழர்கள் பற்றிய தகவல்களை தனியாக சேகரித்து கணினிமயப்படுத்துவதன் மூலம், அனைத்து தமிழர்களையும் தொடர் கண்காணிப்புக்குள் கொண்டுவரவே இதன் மூலம் சிங்கள அரசு முயற்சிக்கிறது.

ஒரு நாட்டுக்குள் நுழையும் அந்நியப் பிரஜைகள் கூட இதைவிட நாகரிகமாக நடத்தப்படுவர். இதன்மூலம் உளச்சிக்கலுக்குள்ளாக்கி அவர்களை சிதைத்து அடிபணியச்செய்து விடலாம் என்றே சிங்கள அரசு நம்புகிறது. புதிய உத்திகளை பயன்படுத்தப் போவதாக கூறுகின்றார்கள். அனைவரையும் மந்தைகள் போல அடைத்து குற்றவாளிகளாக்கி, புகைப்படம் எடுத்து, கைரேகைகள் எடுத்து பத்திரப்படுத்தப் போகின்றோம் என்கிறார்கள். பின்னர், தமிழரை சமத்துவமாக நடாத்துகின்றோம் என்பார்கள். தமிழருக்கு என்ன பிரச்சனை என்பார்கள்?

எம்மை இப்படியெல்லாம் சித்திரவதை செய்ய இவர்கள் யார்? முதலில் எங்கள் தாயகத்தை விட்டு இவர்கள் வெளியேறட்டும் . இவர்கள் நாட்டைவிட்டு நாம் வெளியேறி எங்கள் நாட்டிற்கு எங்கள் தமிழீழத்திற்கு சென்று விடுகின்றோம். அதன்பிறகு நாம் மட்டுமல்ல அவர்களும் கூட அச்சமின்றி அமைதியாக அவரவர் இடங்களில் வாழட்டுமே !

## அரசுக்கு எதிராக ஆசிரியர்கள் சங்கங்கள் !

நமது தாயகத்தில் ஆசிரியர்களின் போராட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. பல்வேறு இராணுவ கெடுபிடிகளுக்கும் உள்நாட்டு போர்ச்சூழலுக்கும் மத்தியில் விடாப்பிடியாக இப்போராட்டம் நடந்து முடிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சமூகத்திலுள்ள எந்தவொரு தரப்பும், தமது அடிப்படை உரிமைகளுக்காகவும் சமத்துவத்திற்காகவும் சட்டபூர்வ எல்லைகளுக்குள் நின்றும் அதற்கப்பாலும் நடாத்தும் இப்படிப்பட்ட நியாயமான போராட்டங்களை வாழ்த்தி வரவேற்பதுடன் அவற்றிற்கு எமது தேசத்தினதும் சக தேசங்களதும் முழுமையான ஆதரவு தரப்பட வேண்டும்.

இப்போராட்டமானது வெறுமனே ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை அல்ல. அரசினது பல்வேறு அடக்குமுறை வடிவங்களில் இதுவும் ஒன்றாகும். எனவே நேரடியாக இது அரசியல் பிரச்சினையாகும். அரச அதிகாரிகளும் விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்ட தமிழ் அமைப்புகளின் தலைமைகளும் அரசின் அங்கங்கங்களாகவே செயல்படுகின்றனர் என்ற வகையில் இப்படிப்பட்ட பிரச்சினைகளில் நீதியான தீர்வுகளை இவர்கள் பெற்றுத் தருவார்கள் என்றோ அல்லது தானாகக் கிடைத்துவிடுமென்றோ எதிர்பார்க்க முடியாது.

இப்பிரச்சினையில் அரசு இயந்திரத்தின் அநீதியானது இம்முறை வடக்கு கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள ஆசிரியர்களை சமகாலத்தில் பாதித்ததன் காரணமாக குறிப்பிட்ட அளவிற்கு அவர்களுக்கிடையில் பொதுப் புரிதல் ஏற்பட்டிருந்தது. இதனை இனங்கண்ட அரசு சிங்கள ஆசிரியர்களை தனிமைப்படுத்த முயன்றதானது முக்கிய படிப்பினையாகும். கடந்த தசாப்தங்களில் இவ்வாறாக சமூகங்களுக்கு இடையில் நிலவிய ஐக்கியத்தை, ஒருமைப்பாட்டை திட்டமிட்டு சிதைப்பதில் இந்த ஆளும் குழுமம் வெற்றி பெற்றதை நாம் அறிந்ததே. இவ்வாறான சதிகள் மீண்டும் எதிர்காலத்தில் கைக்கொள்ளப்படும் என்பதில் விழிப்பு அவசியம்.

ஒரு சமூகத்திலிருந்து வரும் தனிப்பட்ட ஒரு சிலர் மற்றும் அதிகாரிகளின் கேடுகெட்ட நடத்தைகள் காரணமாக மற்றொரு சமூகம் பாதிக்கப்படுவது கணிசமாக நடந்து வருகிறது. இவற்றின் பின்னால் சுயநலம் பிடித்த அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இருந்து வருகின்றனர் என்பதும் நாம் அறிந்ததே. இவ்வாறான நிலைமைகளில் சம்பந்தப்பட்ட இரு சமூகங்களும் தமக்குள் பிளவுகளை உருவாக்கிக் கொள்ளக்கூடாது. இவ்வாறான நபர்கள் சார்ந்த தவறுகளுக்காக, சமூகங்கள் தமக்கிடையில் பிளவுபடும்வண்ணம், பொதுவான போராட்டங்களின் கோரிக்கைகள் அமையக்கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையில் நாம் இருக்க வேண்டும்.

(தொடர்ச்சி 07இல்)

எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்

# நமது இன்றைய கடமை

நம் தேசத்தில் அடக்குமுறைகளின் கொடுமை ஒருபுறமும் அநீதிகள் மற்றும் அசமத்துவங்கள் மறுபுறமுமாக மலிந்து கிடக்கின்றது. மனித உரிமைகளும் அடிப்படை சனநாயக பண்புகளும் அன்றாடம் பறிக்கப்படுகின்றன. இதனால் விடுதலைக்கான, புரட்சிகர மாற்றத்திற்கான அவசியம் மென்மேலும் வலுப்பெற்றுள்ளது. நிலைமை இப்படியே இருந்து விட முடியாதென்பதை அவரவர்தம் அனுபவங்களில் இருந்து ஆழமாக புரிந்து கொண்டுள்ளோம். எனவே மாற்றம் தவிர்க்க முடியாதது என்பதே யதார்த்தமாகவும் சமூக விதியாகவும உள்ளது.

நம்மைச்சுற்றிலும் பல சமூகங்களில் இத்தகைய தவிர்க்கமுடியா தீவிர மாற்றங்கள் காலத்திற்கு காலம் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நம்பக்கடினமானவை கூட இன்று வரலாற்றில் பதியப்பட்டு விட்டன. நமிபீயா, பலஸ்தீனம், எரித்திரியா தென்னாபிரிக்கா, கிழக்குதிமோர் என பகுதியளவிலோ முழு அளவிலோ மாற்றங்களை சரித்திரமாக்கிக் கொண்டிருக்கின்றன. மாற்றம் ஒன்று மட்டும்தான் உண்மையாகும்.

இம்மாற்றங்கள் தாமாக நடந்தேறுவதில்லை. மாறாக அவை வலிந்து நிகழ்த்தப்பட்டிருக்கின்றன அதுவும் மக்களின் ஒன்றுபட்ட பலமான விடாப்பிடியான போராட்டத்தின் மூலமாக, அவர்களை தலைமை தாங்கி வழிநடாத்திய அமைப்புகளின் பலமான ஒன்றிணைப்பின் மூலமாக நிகழ்த்தப்படுகின்றன.

இதற்கான போராட்டங்கள் நீண்டு நெடியவை. மூன்று மாத படைக்கலப்பயிற்சி முடித்து, போராட்டத்தில் வீறுடன் குதித்து, எதிரிகளை விரட்டியடித்து, விடுதலை வென்று பின் வீடுகளுக்கும் படிப்பிற்கும் தொழிலுக்கும் போய்விடலாம் என்ற மாயை என்றோ அகன்று விட்டது. இன்று போராட்டம் என்பது நமது வாழ்க்கையாகி விட்டது. புரட்சி என்பது தொடர்ச்சியானது, முற்றுப்பெறாதது, கட்டங்கட்டமாக பல நிலைகளைக் கடந்து செல்ல வேண்டியிருப்பது. இந்த புரிதல் நமக்கு இன்று அடிப்படையானது. இப்புரிதலின்றேல் புரட்சியும் போராட்டமும், அதனை வழிநடாத்தும் இயக்கங்களும் தேக்கமுறும், தட்டுத்தடுமாறும், அழுத்தங்கள் மிகும்போது திசைவிலகும். போராட்டம் குறித்த எந்த மாயையும் இன்றைய நிலையில் நமக்கு ஆபத்தானது. நமது தேசத்தின் மீட்சிக்கு இது ஒரு வகை எதிரியாகிவிடும்.

போராட்டத்தின் இன்றைய் கட்டத்தில் நம் தேசம் முன்னேறிச்செல்கின்றதா? தேக்கமுற்றுள்ளதா? அல்லது பின்னடைந்து விட்டதா? என்ற பரிசீலனை அவசியமானது. நம் தேசம் பின்னடைந்து விடவில்லை என்பது உறுதி. ஆனால் ஒரு வகை தேக்கம் ஆட்சி செலுத்துகிறது என்பதில் கேள்விக்கிடமில்லை. தேக்கத்தை கேள்விக்குள்ளாக்கி கடந்து செல்ல வேண்டும் எனபதிலும் இருவேறு கருத்துக்கிடையாது.

பரந்துபட்ட மக்களதும், பல்வேறு சமூக சக்திகளதும் பலமான பங்குபற்றுதலில் போதாமை உள்ளது. இது தொடர்ந்து இருந்து வரும் ஆபத்தான போக்காகும். மாற்றம் அவசியமெனின் இந்நிலைமைக்கு முற்று வைத்தாக வேண்டும். அவ்வாறாயின் எமது போராட்ட வழிமுறைகள் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும். பரிசீலிக்கப்பட வேண்டும். துணிந்தும், திறந்த மனத்தோடும் இது செய்யப்பட வேண்டும். ஈற்றில் தவறுகள் களையப்பட வேண்டும்.

முதலில் தங்குதடையற்ற சுயவிமர்சனங்கள் நமக்குள் தேவை. தவறுகளை ஒப்புக்கொள்ள தயங்குவதும் தவறுவதும் மேலும் பல தவறுகளுக்கு இட்டுச்செல்லும். இவ்வாறாக முன்னேறிச்செல்வதை தவிர்த்து தேக்கத்தை கண்டு சோர்வதும் நம்பிக்கை இழப்பதும் தேசத்தை பொறுத்தவரையில் தற்கொலைக்கொப்பானது. இந்த அவநம்பிக்கை ஒழிக்கப்பட கடின உழைப்பு இன்று தேவைப்படுகிறது. பற்பல அர்பணிப்புகள் அவசியமாகின்றது. அதிலும் அரசியல்விழிப்புணர்வுடன் போராட்டத்தை தலைமை தாங்கி செல்லக்கூடியவர்களுக்கு இவை இருமடங்கு தேவைப்படுகின்றது.

இவ்விடயத்தில் தற்போது போதுமான வெற்றிடங்களும் பற்றாக்குறைகளும் உள்ளன. உடனடியாக இது நிரப்பப்பட வேண்டும். களையப்பட வேண்டும். எமது மக்களின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்ப நாம் பன்மடங்கு விடாமுயற்சியுடன் செயற்பட வேண்டும். எதிரிகளின் தலைவிதி என்றென்றைக்கும் தோல்விதான் என்றால், ஏன் நாம் அதனை துரிதப்படுத்தக்கூடாது. இதற்கு தேசத்தினுள் நம்பிக்கையை வலுப்படுத் வேண்டும், பலமான ஐக்கியத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

நம்முன நீண்ட பணி காத்துக்கிடக்கின்றது. மேலெழுந்தவாரியாக இது மலைப்பாக தோன்றலாம். யதார்த்தம் கடினமானதுதான் ஆனால் நிச்சயம் வெல்ல முடியும். கட்டங்களை கடந்து பொறுமையுடன் முன்னேறிச்செல்வோம். முழுத்தேசத்தின் பலத்தில், அரசியல் ஆவேசமும், ஆழமான அர்பணிப்பும் கொண்ட அதன் பலமான பங்குபற்றலுடன் இதனை செய்ய வேண்டும். நிச்சயம் இதனை செய்வோம். இதற்கு புரட்சியையும் போராட்டத்தையும் வாழ்வாக வரித்துக்கொண்ட பலர் முன்வர வேண்டும். முன்மா[illegible]னவர்கள் பலர் முன்வரவேண்டும். அவர்கள் அணிதிரள வேண்டும். அவர்கள் அணிதிரட்டப்பட வேண்டும். முன்னாள் போராளிகள் பலர் மீண்டும் எழுச்சி கொள்ள வேண்டும். பலமான மக்கள் ஆதரவையும் பங்களிப்பையும் நாம் திரட்ட வேண்டும். நம்மைச்சுற்றி பலமான மக்கள் படை அமையவேண்டும். பல தடைகளும் தகர்க்கப்பட்டு போராட்டம் முன்செல்ல வேண்டும்.

## நமக்கொருபாடம்

குர்திய விடுதலை இயக்கமான குர்திய தொழிலாளர் கட்சி (PKK) யின் தலைவர் அப்துல்லாஹ் ஒக்கலானுக்கு துருக்கிய அரசு மரண தண்டனை வழங்க தீர்ப்பளித்துள்ளது. கூடிய விரைவில் இத்தண்டனை நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வரலாற்றில் மிகவும் மோசமாக வஞ்சிக்கப்பட்ட தேசிய இனங்களில் குர்திய இனமும் ஒன்று. தனது பாரம்பரியப் பிரதேசத்தை துருக்கி, ஈரான், ஈராக், சிரியா என ஆளாளுக்கு பகிர்ந்து கொண்டுள்ளன. இன்று 2 கோடிக்கும் அதிகமான குர்திய மக்கள் நாடற்றவர்களாக சொந்த மண்ணிலும், புலம்பெயர்ந்துமாக வாழ்கின்றனர். இதில் பெரும்பாலான குர்திய மக்கள் வாழுமிடமாகவும் பெருமளவு குர்திய நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ள நாடாகவும் துருக்கி விளங்குகிறது.

குர்திய தேசத்தை தொடர்ந்தும் அழித்தும், நசுக்கியும் வந்த துருக்கி, 1924இல் குர்திய கல்வி நிலையங்கள், சங்கங்கள், பிரசுரங்கள் சகலவற்றையும் தடை செய்ததுடன், குர்திய மொழியையும் தடை செய்து இனச்சுத்திகரிப்பினைத் தொடங்கியது. குர்தியர் என தன்னைக் கூறிக்கொள்வது சட்டப்படி குற்றமாக்கப்பட்டது. அவ்வாறு கூறிய துருக்கிய பாராளுமன்ற உறுப்பினர் கூட இரண்டாண்டுகள் கடுங்காவல் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

1920கள், 1930களில் நூற்றுக்கணக்கான குர்திய கிராமங்கள் துருக்கிய படைகளால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் தான் குர்திய மக்களின் ஆயுதப் போராட்டம் எழுச்சி கண்டது.

பல குர்திய விடுதலை இயக்கங்கள் போராடினாலும் மிகவும் பலம் பொருந்திய இயக்கமாகவும் சோசலிசத்தை அடிப்படையில் ஏற்றுக்கொண்ட இயக்கமாகவும் இருப்பது PKK. உலகின் பலம் வாய்ந்த கெரில்லா இயக்கங்களில் இரண்டாவதாக கூறப்படுவது PKK ஆகும்.

PKKவுக்கு துருக்கியின் அண்டைய நாடான சிரியா ஆதரவளித்ததுடன் அந்நாட்டிலிருந்தே ஒக்கலான் PKK வை வழிநடத்தினார். ஆனால் கடந்த ஆண்டு இறுதியில் துருக்கிய அரசு, சிரிய எல்லையில் தனது படைகளை குவித்து ஒக்கலானை தம்மிடம் ஒப்படைக்குமாறு மிரட்டியது. இதன் விளைவாக ஒக்கலான் தஞ்சம் கோரி பல ஐரோப்பிய நாடுகளுக்கு மாறி மாறி சென்றார். சகல நாடுகளும் துருக்கியின் பின்னணியில் இருக்கும் அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தால் ஒக்கலானுக்கு உதவ மறுத்து விட்டனர். இறுதியில் கிரேக்கத்தில் வைத்து சீ.ஐ.ஏ., மொஸாட் ஆகியவற்றின் துணையுடன் துருக்கி அரசு ஒக்கலானை கைது செய்தது.

ஈராக்கின் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா பயன்படுத்தி வந்ததும் துருக்கியின் கட்டுப்பாட்டிலுள்ள குர்திய பகுதியையே. அதுபோல துருக்கி அமெரிக்காவின் முக்கிய அயுத கொள்வனவு நாடு. இதைவிட அமெரிக்கா தலைமை வகிக்கும் நேட்டோ கூட்டில் துருக்கியும் அங்கத்துவ நாடு.

இப்படிப்பட்ட பின்னணியிலிருந்து தான் ஒக்கலான் விவகாரத்தையும் காண வேண்டியுள்ளது. எந்தவொரு ஏகாதிபத்திய மற்றும் அதன் சார்பு நாடுகளும் எப்போதும் அடக்கப்படும் பிரிவினருக்காக தமக்குள் முரண்பட்டுக்கொள்ளாது. மாறாக சேர்ந்து நசுக்கும். இதனையே ஒக்கலான் விடயத்தில் மெய்ப்பித்துள்ளது.

நமது போராட்ட அனுபவத்திலும் கூட இந்திய அரசு மற்றும் அமெரிக்க அரசு போன்றவற்றின் நடவடிக்கைகளில் இருந்து நாம் எமது சொந்த பலத்தில் நிற்றல், நிற்காமை என்ற விடயத்தில் நேர்மறை எதிர்மறை அனுபவங்கள் சிலவற்றை கற்றுக் கொண்டிருக்கிறோம்.

ஏகாதிபத்தியத்தை சார்ந்திருத்தல் அல்லது நம்பி [illegible] வையுமே சகல விடுதலைப் போராட்டங்களுக்கும் ஒக்கலான் விவகாரம் கற்றுத்தந்துள்ளது.

குர்திய விடுதலைப் போராட்டத்தை ஒக்கலான் என்கிற தனிநபரை கைது செய்துவிடுவதன் மூலம் அடக்கி விடலாம் என துருக்கிய அரசும் ஏகாதிபத்தியங்களும் திட்டமிடுகிறது எனின் அது எத்துணை முட்டாள்தனம் என்பதை வரலாறு அவர்களுக்கு உணர்த்தும். மக்களின் பலமான அடித்தளத்தில் அமைந்த குர்திய விடுதலைப் போராட்டம் நிச்சயம் தப்பிப் பிழைக்கும்.

குர்திய மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எமது ஆதரவை ஓங்கி ஒலிப்போம்.

குர்திய விடுதலை நிடுழி வாழ்க!

# பெண்கள் மீதான யுத்தகால வன்புணர்ச்சி !

அடக்கப்பட்ட தேசங்களின், மக்கள் சமூகங்களின் நிலையில் யுத்தம் என்றும் துயர் நிரம்பியதாகும். இம்மக்களின் மத்தியில் சமூக ரீதியாக மிகவும் பலவீனமான நிலையிலிருப்பவர்களே யுத்தத்தின் பாதகமான அனைத்துப் பலாபலன்களையும் அனுபவிப்பவர்களாயுள்ளனர். ஆக்கிரமிப்பு யுத்தங்களால் கூடுதல் துயரை எதிர்கொள்ளும் மக்கள் பிரிவாக பெண்கள் உள்ளனர். இதன் காரணம் எதிரியின் வன்முறையை பெண்கள் இரு தளங்களில் எதிர்கொள்ள நேர்வதாலாகும்.

குறிப்பிட்ட தேசத்து பிரஜைகள் எனும் காரணத்தினால் இனப் படுகொலைக்கும், குண்டுத் தாக்குதலால் உடல் சிதைவுக்கும் பெண்கள் உள்ளாகின்றனர். அதே நேரம் பெண்களாக இருப்பதன் நிமித்தமே தமது உடல் மீதான எதிரியின் அத்துமீறலுக்கும் உள்ளாகின்றனர். எதிரிப்படையால் பெண்கள் வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்படுவது ஆக்கிரமிப்பு யுத்தங்களில் ஒரு பொது நிகழ்வாயுள்ளது. சில யுத்தங்களில் வன்புணர்ச்சியானது யுத்தத்தின் ஒரு அங்கமாக திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படுகிறது. ஆதிக்கவெறி பிடித்த, அதிகாரம் மிக்க அரசுகள் தமது ஆண் படைகளை இதற்கென்றே பயிற்றுவிக்கவும் செய்கின்றன. வன்புணர்ச்சி மற்றும் குரூரமான பாலியல் சித்திரவதைகள் பற்றிய சித்திரங்கள் படைகள் மத்தியில் பரப்பப்படுகின்றன. சில யுத்தங்களில் வன்புணர்ச்சி தன்னிச்சையாக நடைபெறுவதாகும். எனினும் இரண்டினதும் சாராம்சம் ஒன்றே. வன்முறை, ஆதிக்க சிந்தனை, அகங்காரம், குரூரத்தன்மை, உடமை மனோபாவம், துன்புறுத்துதல், அவமானப்படுத்துதல்.. .. யாவும் இதற்குள் புதைந்துள்ளன.

தமிழீழத்தை ஆக்கிரமித்திருக்கும் சிறிலங்கா ஆண் படைகள் தமிழ்ப் பெண்களின் மீது தன்னிச்சையாக பாலியல் துன்புறுத்தல்களையும் வன்புணர்ச்சியையும் மேற்கொள்கின்றன. படைத்தலைமையும் அரசும் முடிந்தவரையில் இவற்றை மூடிமறைத்திடவே முயல்கின்றன. விடயம் வெளியில் வந்து அது வெகுஜன அதிருப்திக்கும் சர்வதேசக் கண்டனத்திற்கும் உள்ளாகையில் குற்றவாளிகள் மீதான விசாரணை நாடகம் நடந்து முடிகின்றது. தமது வன்புணர்சிக் குற்றத்தை மறைப்பதற்காக, தம்மால் கூட்டு வன்புணர்ச்சிக்குள்ளான பெண்ணை கொன்று அவரது உடலை சிதைத்துவிடுவதன் மூலம் தடயங்கள் இன்றி தப்பித்துக்கொள்ள முயல்கின்றன ஆக்கிரமிப்புப் படைகள். சிறிலங்காப் படைகளின் இக் காட்டுமிராண்டித்தனமான போக்கு தமிழ் பெண்களுக்கு உயிர்வாழ்தல் தொடர்பான இரட்டிப்பு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்ப் பெண்களின் மீதான சிறிலங்காப் படைகளின் குறிப்பான இவ்வடக்குமுறையானது ஆணாதிக்க தளத்தில் நடைபெறும் ஒன்றாகும். அதே நேரம் இது தேசிய அடக்குமுறையின் நிமித்தமாக பலம் பெற்ற ஆணாதிக்கப் போக்காயுமுள்ளது. தம்மால் அடக்கப்பட்டிருக்கும் தேசத்தின் பெண்களை நசுக்குவது சிங்கள ஆண் படைகளுக்கு இலகுவானதாயுள்ளது. ஆக்கிரமிப்பு தேசிய வெறியும், ஆணாதிக்கமும் இங்கு ஒன்றிணைந்துள்ளன. இந்த ஆதிக்க நிலைக்கு அவர்களிடமுள்ள ஆயுதங்கள் கூடுதல் பலத்தை அளித்துள்ளன. இதன் மறுபுறம் அடக்கப்படுகின்ற தமிழ் தேசத்தின் பெண்கள் நிராயுத பாணிகளாக ஆயுதம் தரித்த ஆக்கிரமிப்பு தேசத்து ஆண் படைகளை எதிர்கொள்கின்றனர். பெண்கள் எதிர்கொண்டு வரும் இந்த யுத்தகால இரட்டை துயரமானது நமது தேசிய பிரச்சினையுடன் பிணைந்ததாகும்.

பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் யுத்தகால பாலியல் குற்றங்களை ஒரு சமூகம் எனும் வகையில் நாம் எவ்வாறு எதிர்கொள்கிறோம்? இது தொடர்பாக நமது மனவுணர்வுகள், பிரதிபலிப்புகள் என்ன? எதிரிப்படையினால் துன்புறுத்தலுக்கும் வன்புணர்ச்சிக்குமுள்ளான பெண்களின் நேரடி வாக்கு மூலங்களே இதற்கு சான்று பகர்கின்றன:

-இந்தியப்படைகளால் தமிழீழம் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காலத்தில் நமது தேசப் பெண்கள் இந்தியப் படைகளின் துன்புறுத்தல்களை எதிர்கொண்டு வந்தனர். ஒருநாள் மதிய வேளையில் இராணுவத்தினர் சிலர் ஒரு வீட்டில் நுழைந்து அவ்வீட்டுப் பெண் மீது பாலியல் குற்றம் புரிய முயல்கையில் அவர் சத்தம் போட்டு அயலவரை உதவிக்கழைத்தபடி தப்பித்துக்கொண்டார். மாலையில் வேலைத்தளத்திலிருந்து வீடு திரும்பிய அப்பெண்ணின் கணவன் நடந்ததையறிந்து அப்பெண்மீது கோபம் கொண்டதுடன் பெண்ணின் தாய்வீட்டுக்கு சென்று அதை ஒரு முறைப்பாடாகக் கூறியதுடன் ஒரு சிலநாட்கள் தனது மனைவியுடன் கதைக்காது பிரிந்திருந்தார்.

- ஐந்து பிள்ளைகளின் தாயான 45 வயதுடைய பெண்ணொருவரை, போராளிகளுக்கு உணவு வழங்கினார் எனும் குற்றச்சாட்டில் சிறிலங்கா இராணுவம் கைதுசெய்தது. நோயாளியான கணவனையும் ஐந்து பிள்ளைகளையும் தனது உழைப்புச் சக்தியால் பராமரித்து வந்த அப்பெண் சிறைக் கொட்டடியில் வைத்து இராணுவத்தினால் சித்திரவதைகளுக்கும் வன்புணர்ச்சிக்கும் உட்படுத்தப்பட்டார். 18 மாதங்களின் பின் சிறை மீண்ட அப்பெண்ணை அவரது கணவன் புறக்கணித்ததுடன் அவரை உளவியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கி வந்துள்ளார். இறுதியில் வீட்டை விட்டே அப்பெண் தனது கணவனால் வெளியேற்றப்பட்டார்.

- பெண்கள் தெருவில் செல்கையிலும், வீடுகளிலிருக்கையிலும் சோதனைக்கு வரும் இராணுவம் பெண்களின் உடலை அத்துமீற முயலும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதுண்டு. அது தொடர்பாக குடும்பத்தினரும் அயலவரும் பெண்களையே கவனமாக இருக்கும்படி அறிவுரை கூறுவதுடன், பெண்களின் கவனக்குறைவும் துடுக்குத்தனமுமே அவர்கள் இராணுவத்தின் இம்சைகளுக்கு உள்ளாகக் காரணம் என பெண்களையே குற்றம் கூறுவது நமது சமூகத்தில் பரவலாகக் காணப்படுகிறது.



இராணுவத்தினால் வன்புணர்ச்சிக்கும் துன்புறுத்தல்களுக்குமுள்ளான பெண்களை அவர்களது கணவன்மாரும், குடும்பத்தினரும் அயலவர்களும் தமக்கு வேண்டாதவளாக, தமக்கு அவமானத்தைத் தேடித்தந்தவளாகவே பார்க்கின்றனர். தமது பெண்ணுக்கு இழைக்கப்பட்டிருக்கும் கொடுமையைக் கண்டு மனம் கொதிக்காது, அதற்கெதிராக நியாயம் கேட்காது, அப்பெண்ணை அரவணைத்து அவருக்கு தைரியமளித்து தமது நெருக்கத்தை, பராமரிப்பை, கரிசணையை அவருக்கு வழங்காது இல்லாத ஒரு கௌரவத்தை அவர்கள் காத்திட முயல்கின்றனர். அது மாத்திரமன்றி இந்தக் கொடுமைகளையெல்லாம் பெண்களைத் தவறாகப் பார்க்கும் மனோபாவமும் நமது சமூகத்தில் நிலவுகிறது.

தமிழ் தேசத்துப் பெண்கள் எனும் காரணத்தினாலேயே எதிரிப்படைகளின் துன்புறுத்தல்களுக்குள்ளாகும் நமது தேசப் பெண்களை நாமும் நமது பங்கிற்குத் தனிமைப்படுத்தப் போகிறோமா? இதை அவர்களின் தனிப்பட்டப் பிரச்சினையாகக் கருதி இத்துயரங்களை அப்பெண்களே தனித்து சுமந்திட வேண்டுமெனக் கருதுவது எவ்விதத்தில் நியாயமானது ?

நமது தேசப் பெண்கள் மீது எதிரிகள் மேற்கொள்ளும் ஒவ்வொரு அத்துமீறல் நடவடிக்கையையும் நம் ஒவ்வொருவரினதும் மீதான அத்துமீறலாக உணர்வோம். எதிரியினால் வன்புணர்ச்சிக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளான பெண்களின் உணர்வுகளுடன் நமது உணர்வுகளைப் பிணைத்துக் [illegible]வோம். அவர்களுக்கு நமது விசேட அக்கறையையும், தைரியத்தையும் கரிசனையையும் வழங்கி அவர்களை உளவியல் ரீதியாகப் பலப்படுத்துவோம். நமது பெண்களை துன்புறுத்திடும், வன்புணர்ச்சிக்குட்படுத்திடும் எதிரிகளை தண்டிக்கும் நடவடிக்கையில் தேசமாக அணிதிரள்வோம்.

இதன் மறுபுறம் நமது சமூகத்தின் அகவாழ்வில், குறிப்பாக விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் வன்புணர்ச்சி தொடர்பாக கட்டமைக்கப்பட்டு வந்திருக்கும் உளவியலையும் நாம் பார்க்காது செல்லமுடியாது.

சிங்கள அரசிற்கெதிரான வெறுப்புணர்வை சிங்கள தேசத்தின் மீதான வெறுப்புணர்வாக வளர்த்துக்கொண்டதன் விளைவு தமிழீழத்தில் தேசிய சிறுபான்மையினராக வாழும் சிங்கள மக்களை பழிவாங்குவற்கு தமிழ்ப் போராட்ட அமைப்புகளை இட்டுச் சென்றது. எல்லைப்புறங்களில், தகவல்கள் பெரிதும் வெளிவராத தொலைதூரக் கிராமங்களில் வாழும் வறுமைப்பட்ட சிங்களக் குடும்பங்களின் பெண்களை சில போராட்ட அமைப்புகள் வன்புணர்ச்சிக்குள்ளாக்கி கொலை செய்தன. எதிரியைப் பழிவாங்கும் உணர்வானது எதிரி தேசமாகக் கருதப்படும் சிங்கள தேசப் பெண்களின் மீதான பாலியல் துன்புறுத்தலாகவும் வன்புணர்ச்சியாகவும் வெளிப்பட்டதை வெட்கத்துடன் ஒத்துக்கொள்வோம்.

உளவாளிகளாக சந்தேகிக்கப்படும் பெண்களை கைது செய்திடும் போராட்ட அமைப்பு ஆண்கள் அப்பெண்களை இரகசியமாக கூட்டு வன்புணர்ச்சிக்குட்படுத்திய பின்னர் விளக்குத்தூணில் கட்டி பகிரங்க மரணதண்டனை வழங்கும் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இது மறைக்கப்பட்ட ஆனால் மறுக்கப்பட முடியாத உண்மைகளாகும்.

(தொடர்ச்சி 05இல்)

# மனிதவதை !

மனித வதை என்பது ஒருவரது உடல் மற்றும் உள்ளம் மீது பிறரால் மேற்கொள்ளப்படுகின்ற அத்துமீறலென பொதுவாக வரையறுக்கப்படுகின்றது. ஒருவரது உடல் மற்றும் உள்ளம் மீது அவருக்குள்ள உரிமை மீறப்படும்போது, அங்கு மனிதவதை ஆரம்பமாகி விடுகின்றது. இவ்வாறான உரிமை மீறலானது, ஒருவரின் சுயத்தின் மீது, அவரின் தெரிவுக்கான சுதந்திரத்தின் மீது தொடுக்கப்படுகின்ற கொடுந்தாக்குதலாக அமைகின்றது. மனிதவதையானது, ஒருவரது கருத்து சுதந்திரத்தை மறுப்பதிலிருந்து, ஒருவரின் உயிர்வாழும் உரிமையையே பறிப்பதுவரை பல வடிவங்களை பெறுகின்றது, பலவடிவங்களில் நிகழ்த்தப்படுகின்றது.

மனித வதையானது பரந்த அளவிலும் "தவிர்க்க முடியாத" நிகழ்வாகவும் நிகழ்த்தப்படுகின்ற தளமாக அரசியல் களம் விளங்குகின்றது. குறிப்பாக, அரசியல் நடவடிக்கைகள், ஆயுதப்போராட்ட வடிவத்தை பெறுகின்ற சூழலில், மனித வதை என்பது ஒரு வழமையான நிகழ்வாகி விடுகின்றது, அது ஒரு தவிர்க்க முடியாத அம்சம் என்று நியாயப்படுத்தப்படுகின்றது. ஒருபுறம் அடக்குமுறை அரசுகள் தமக்கு எதிரான மக்கள் போராட்டத்தை நசுக்குவதற்குரிய வழிமுறைகளில் ஒன்றாக மனித வதையை அதன் உச்ச வடிவில் பிரயோகிக்கின்றன. பொலிஸ் நிலையங்கள் இராணுவ முகாம்கள், சிறைச்சாலைகள் என அனைத்துமே வதைமுகாம்களாக மாற்றப்படுகின்றன. அரசுக்கெதிரான மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரு அம்சமே, ஒருவர் மீது சித்திரவதையை பிரயோகிப்பதற்கான காரணமாக அமைந்து விடுகிறது.

மறுபுறம், போராட்ட அமைப்புகளே தமது சொந்த மக்களை சித்திரவதைக்கு உள்ளாக்குகின்ற கொடிய நிலையைக் காண்கின்றோம். உளவாளிகள், காட்டிக் கொடுப்பவர்கள், துரோகிகள், சமூக விரோதிகள், அமைப்பு கட்டுப்பாட்டை மீறியவர்கள்.... என்ற முத்திரைகளின் கீழ் ஒருவரின் உடலும் ஆன்மாவும் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றன, அல்லது ஒருவரது உயிர் மிக எளிதாக பறிக்கப்படுகின்றது. இவ்வாறு, ஆயுதப் போராட்ட அமைப்புகள் சொந்த மக்களையே, சக போராளிகளையே வதைக்குட்படுத்தி வந்திருக்கின்ற அவல நிகழ்வுகளின் உயிருள்ள சாட்சிகளாக, ஈழத் தமிழர்களாகிய நாமும் இருக்கிறோம்.

80களின் தொடக்க காலங்களை ஒருமுறை நினைவில் கொண்டு வருவோம்: எத்தகைய ஒரு கிளர்ச்சி, வேகம், உணர்ச்சி எம்மக்கள் மத்தியில் பீறிட்டெழுந்தன! எத்தனை ஆர்வம், கனவு, எதிர்பார்ப்பு, நம்பிக்கை எம்தேசத்தை ஊடறுத்து பிணைத்தன! புதிய உதயத்திற்காக, விடுதலைக்காக, எமக்கான அரசுக்காக நாம் எத்துனை ஆவல் கொண்டிருந்தோம்!


80களின் பிற்பகுதிகளில், நாம் முற்றிலும் வேறான உணர்வுகளினால் சூழப்பட்டோம். மின்கம்ப சடலங்களை கண்டு அதிர்ந்தோம், போராட்ட அமைப்புகளுக்குள் இடம்பெற்ற சித்திரவதைகளும் படுகொலைகளும் எம்மை உலுக்கின, ஒவ்வொரு இயக்கமும் கொண்டிருந்த வதை முகாம்களில் நிகழ்த்தப்பட்ட கொடுமைகளை கேட்டு உறைந்துபோனோம். இயக்கங்களுக்கிடையிலான மோதல்களில் கொல்லப்பட்டு, தெருவோரங்களில்கிடந்த சடலங்களை கண்டு திகைத்தோம். அச்சம் நிறைந்த கருஞ்சோகமூட்டம் எம்மை சூழ்ந்து இறுக்கியது. இந்த நிலையே இன்றுவரை தொடர்கின்றது.

எமது போராட்டத்தில் இடம்பெற்ற உட்கொலைகளும், சித்திரவதைகளும், இயக்க மோதல்களின் விளைவுகளும் எம்மில் பலரை போராட்டத்தில் இருந்து வெளியேற்றின, போராட்டத்தில் இருந்து ஒதுங்க செய்தன, போராட்டத்தின் மீதான நம்பிக்கையை இழக்க செய்தன, அத்துடன் ஒரு பிரிவினரை போராட்டத்தை எதிர்ப்பவர்களாகவும் மாற்றியிருக்கின்றன.

இந்த நிலைமை இப்படியே தொடர்வதுதான் எம்மீதும் எம்தேசத்தின் மீதும் விதியாக்கப்பட்டிருக்கின்றதா? ஒருபுறம், எமது சொந்த மண்ணில் அகதிகளாக, ஆக்கிரமிக்கப்பட்டவர்களாக, உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக. மறுபுறம், அந்நிய மண்ணில் வேரற்றவர்களாக, நாளாந்தம் அவமானப்படுத்தல்களுக்கும் இழிவுபடுத்தல்களுக்கும் உட்படுபவர்களாக, சுயத்தையே இழந்தவர்களாக.

இவ்வாறு நமது தேசம் தனது அடையாளத்தை இழந்து, வரலாற்றில் தன் இருப்பை இழப்பதை அங்கீகரிக்க போகின்றோமா? அல்லது, அதன் மாண்பை, சுயத்தை, தனித்துவத்தை மீட்டெடுத்து, சுதந்திர தேசத்தின் பிரஜைகளாக நாம் பரிணமிக்க போகின்றோமா?

இவற்றில் இரண்டாவது தெரிவை ஏற்போமாயின், அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டியவர்களாக உள்ளோம். எம்மை சுயமதிப்பீட்டுக்கு உட்படுத்தி, எம்மத்தியில் நிகழ்த்தப்பட்டு வருகின்ற சித்திரவதைகளுக்கும் படுகொலைகளுக்குமான காரணிகளை கண்டு கொள்ள வேண்டும். மீண்டும், எமதுதேசம் தழுவிய அரசியல் போராட்டத்தை சாத்தியமாக்குவதற்காக மட்டுமல்ல, மனிதவதை என்ற விஷச்சுழலுக்குள் மீண்டும் அடித்து செல்லப்படாமல் எம்மை நாமே காத்து கொள்வதற்கும் இது அவசியமாகின்றது.



இவ்வாறான அக்கறையிலிருந்து, எமது போராட்ட அமைப்புகள் அனைத்திலும் நிலவிய, நிலவிவருகின்ற அடக்குமுறை மனோபாவம், ஜனநாயக மறுப்பு, மக்கள்சாரா அரசியல்....போன்ற பொதுப் பண்புகளுக்கான காரணிகளை அடையாளம் காணுகின்ற முயற்சியை இக்கட்டுரை கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு அரசியல் அமைப்பும், தான் செயற்படுகின்ற சமூகத்திலிருந்து தான் தோன்றுகின்றது என்ற உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு, சமூக உறுப்பினர்களின் இணைவினால் உருவாகின்ற ஒரு அரசியல் அமைப்பின் பண்பானது, அந்த உறுப்பினர்களிடம் ஏற்கனவே உள்ளுறைந்துள்ள கருத்துக்கள், மதிப்பீடுகள், மனோபாவம், கலாச்சாரம்.... போன்றவற்றினால் தீர்மானிக்கப்படுகின்றது. எனினும் இவை ஒத்த பரிமாணம் கொண்டவை அல்ல. சமூகத்தில் உள்ள வெவ்வேறு பிரிவினர்களுக்கு ஏற்ப இவை வேறுபடுபவை. இவ்வாறு அளவிலும் வடிவத்திலும் வேறுபட்ட பண்புகளை கொண்டிருக்கின்ற உறுப்பினர்களிடையே, பொதுவான தாபனப் பண்பை சாரப்படுத்துவது என்பது, மிகுந்த கவனத்தையும் பிரக்ஞையையும் கோருகின்ற செயலாக அமைகின்றது. மக்களிடையே நிலவுகின்ற முற்போக்கான, ஜனநாயகபூர்வமான, மனிதாபிமானமிக்க பண்புகளை அடையாளம் கண்டு, அவற்றை தாபனமயப்படுத்துவதும், இவற்றுக்கு முரணான பண்புகளிலிருந்து தவிர்ந்து கொள்வதும் இங்கு அவசியமான அரசியல் செயற்பாடாக அமைகின்றது.

எமது போராட்ட அமைப்புக்களின் பண்பை தீர்மானிப்பதில் நாம் யாருமே இத்தகைய அக்கறையை, புரிதலை கொண்டிருக்கவில்லை. எமது தேசத்தின் பல்வேறு பிரிவினர்களிடையேயும் நிலவுகின்ற கடின உழைப்பு, சிக்கனம், எளிமை, பரஸ்பர மரியாதை, உதவும் மனோபாவம்... போன்ற சிறந்த பண்புகளை அடையாளம் காணவோ, அவற்றை தாபனமயப்படுத்தவோ நாம் தவறிவிட்டோம். இதற்கு மாறாக, எமது சமூகத்தில் நிலவுகின்ற அதிகாரத்துவம், மற்றவரை வீழ்த்துதல், குறுக்கு வழியை நாடுதல்.... போன்ற தவறான பண்புகளை மிக எளிதாக உள்வாங்கி கொண்டோம். இவ்வாறு, எமது அமைப்புகள் அனைத்திலும் அவற்றின் தொடக்கத்திலிருந்தே மனித விரோதப் பண்புகள் திரள்வதற்கும் நிலை பெறுவதற்குமான அடித்தளம் உருவாக்கப்பட்டுவிட்டது.

மறுபுறம் எமது அரசியல் அடித்தளம் இன்னும் கூடுதல் பலவீனமாக இருந்தது. எமது போராட்டம் குறித்து, மக்களின் நலன்கள், எதிர்பார்ப்புகள்..... குறித்து, எமது சமூகத்தில் நிலவுகின்ற முரண்பாடுகள் குறித்து, அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து நாம் அறியாமையில் இருந்தோம். இவற்றை புரிந்து கொள்வதற்கான தேடலில், எமக்கான சுயசிந்தனை தளத்தை உருவாக்குவதில் நாம் பிரக்ஞைபூர்வமாக செயற்படவில்லை. ஒன்றில் சில சுலோகங்களை உச்சரித்தோம், அல்லது மக்களின் அபிலாஷைகளை, முரண்பாடுகளை மௌனமாக உதாசீனப்படுத்தினோம்.

(தொடர்ச்சி 05இல்)

இவ்வாறு, தாபன ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் நாம் பலவீனமாக இருந்தோம். இதனால், ஒருவரின் கருத்து சுதந்திரம், மற்றும் தெரிவுக்கான சுதந்திரம் என்பவற்றை மறுப்பவர்களாக, அவற்றை அடக்குபவர்களாக நாம் மாறினோம் எம்மிடம் உறுதியான, நேர்மையான, சுயமான, மக்களுடன் இணைந்த கருத்துக்கள் இருந்திருக்குமாயின், நாம் மற்றவர்களினால், முன்வைக்கப்படக்கூடிய எத்தகைய கருத்துக்களையும், எதிர்கொள்ளக்கூடியவர்களாக இருந்திருப்போம். எமது கருத்துக்களின் சரியான தன்மையை அவற்றின் செல்தகைமையை தீர்மானிக்கக்கூடியவர்களாக மக்களே இருக்கின்றார்கள் என்பதில் நம்பிக்கை கொண்டிருப்போம். எனவே நாம் கருத்து சுதந்திரம் என்பதை இயல்பான நிகழ்வாக்கியிருப்போம்.

ஆனால் எம்மிடையே அத்தகைய கருத்துக்கள் இல்லாததால், இன்னொருவரின் கருத்துக்களை எதிர்கொள்ள முடியாதவர்களாக இருந்தோம். தாபனத்துக்குள்ளும், வெளியேயும் கருத்துக்கள் சுதந்திரமாக வெளிப்படுவதன் மூலம், எமது தவறான அரசியல் இருப்பு, கேள்விக்குள்ளாக்கப்படும் என்ற யதார்த்தம் எம்மை பலமாகத் தாக்கியது. எனவே அமைப்புக்குள்ளும் மக்கள் மத்தியிலும் கருத்துச் சுதந்திரத்தை மறுப்பவர்களாகவும் அதனை கடுமையாக அடக்குபவர்களாகவும் மாறினோம்.

மறுபுறம் அரசியல் ரீதியாக ஒருவருக்குள்ள தேர்வு சுதந்திரத்திலும் நாம் இவ்வாறே நடந்துகொண்டோம், சமூகம் என்பது முற்றிலும் ஒத்த தன்மை கொண்ட நபர்களின் இணைவல்ல. மாறாக நலன்கள், எதிர்பார்ப்புகள் தேவைகள், சார்ந்து பல பிரிவுகளைக் கொண்டது. ஒரு அரசியல் போராட்ட சூழலில், ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புகள் தோன்றுவதற்கும் அவை ஒவ்வொன்றும் தமக்கென கணிசமான மக்கள் ஆதரவை பெறுவதற்குமான சமூக அடிப்படையும் இதுதான். இவ்வாறான ஒரு சூழலில், தன்னோடு இனம் காணக் கூடியதாகவும், தான் சரியானது என்றும் கருதுகின்ற அமைப்பை நோக்கியே ஒருவரின் ஈர்ப்பும் தேர்வும் இருக்கும். மேலும் பல போராட்ட அமைப்புகள் செயற்படுகின்ற நிலையில், அவை அனைத்துமே பொதுவான இலக்கை கொண்டிருக்கும்போது, அவற்றில் எந்த ஒன்றை ஒருவர் தேர்வு செய்த போதிலும் அது பொது இலக்கை துரிதப்படுத்துவதாகவே அமையும்.

இந்த உண்மைகள் எதையும் நாம் புரிந்து கொள்ளவில்லை. நாம் அனைவருமே தாபன மற்றும் அரசியல் ரீதியில் பலவீனமாக இருந்ததால், மற்ற அமைப்புக்களின் பலவீனத்தில், அழிவில்தான் எமது அமைப்பின் பலமும் இருப்பும் தங்கியிருக்கின்றது என்ற மிகத் தவறான முடிவுக்கு வந்தோம். எங்கள் அமைப்புகளில் நிலவிய பலவீனமே, அவற்றை எப்படியாவது பாதுகாக்க வேண்டும் என்ற அவசியத்தை உந்துதலை எமக்கு ஏற்படுத்தியது. எப்படியாவது நாம் சார்ந்த அமைப்பை பலமிக்கதாகவும், ஏனைய அமைப்புகளிலும் பார்க்க சக்தி மிக்கதாகவும் வெளிக்காட்ட வேண்டுமென்ற அதிகார வேட்கையால் உந்தப்பட்டோம். இவற்றை சாதிப்பதற்காக மக்களின் நலன்களுக்கூடாக போராட்டத்தை முன்னெடுப்பதிலோ, மக்களின் தலைமையாக எம்மை உருமாற்றுவதிலோ நாம் நம்பிக்கை வைக்கவில்லை. மாறாக மக்கள் மீதும், சக உறுப்பினர்கள் மீதும், சக இயக்கங்களினதும் மீதும் நாம் கொண்டிருக்கிற அதிகார பலத்தில் முழு நம்பிக்கை கொண்டோம். எந்தளவுக்கு அதிகாரமிக்கவர்களாக மக்களை வெற்றிகரமாக அடக்குபவர்களாக மாறுகின்றோமோ அந்தளவுக்கு போராட்டத்தில் எமது தலைமை உறுதியாக்கப்படும் என்ற கொள்கையால், நாம், வழி நடத்தப்பட்டோம்.

இவற்றின் திரண்ட விளைவாக, மக்களின் கருத்து சுதந்திரத்தை நாம் மறுத்தோம். எமது அமைப்புகளில் திறந்த, ஆரோக்கியமான கருத்து பரிமாறல்களை தடுத்தோம். எமது கருத்துக்கு மாறான, முரணான கருத்துக்கள் கொண்டிருந்தவர்களை சந்தேகித்தோம். எமது அமைப்பிலிருந்து ஒருவர் விலகும்போது, அதனால் எமது அமைப்பு பலவீனப்படும் என்றும், வேறொரு அமைப்பு பலம் பெறும் என்றும் முடிவு செய்தோம், அதனால் அச்சமடைந்தோம். எனவே ஒருவர் அமைப்பிலிருந்து வெளியேறுவதும், இன்னொரு அமைப்பில் இணைவதும் எமது அமைப்புக்கு செய்யும் துரோகம் என்று அறிவித்தோம். இவ்வாறு உட்கொலைகளுக்கும் சகோதரப் படுகொலைக்குமான தோற்றுவாயை, நியாயங்களை, தர்க்க அடித்தளங்களை உருவாக்கினோம். ஈற்றில், நாம் ஒவ்வொருவருமே அவற்றால் பாதிக்கப்பட்டோம். அவற்றின் கோரவிளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளானோம்.

ஒருமுறை திறந்த மனத்தோடு சுயமதிப்பீடு செய்வோம். எமது பயிற்சி முகாம்களில் எத்தனை வதைகூடங்களை கொண்டிருந்தோம்! அவற்றில் சித்திரவதைக்குட்பட்ட உடல், உள ரீதியாக ஊனமாக்கப்பட்ட, கொல்லப்பட்ட சக உறுப்பினர்கள், சக போராளிகள் எத்தனை பேர்! எம் தோழர்களையே சித்திரவதை செய்வதற்கு எத்தனை கொடிய வழிமுறைகளுக்கு நாம் கையாண்டோம்! எமக்கு எதிராக செயற்படுகின்றார்கள் என்ற சந்தேகத்தில் நாம் மின் கம்ப தண்டனை வழங்கிய மக்களின் எண்ணிக்கை எத்தனை! காட்டிக்கொடுப்போர்கள், உளவாளிகள் என்ற பேரில் கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர்!

ஒருவர் காட்டிக்கொடுக்கிறார், உளவாளியாக செயற்படுகிறார் என்ற சிறு சந்தேகத்திற்கான தீர்வாக அவரைக் கொல்வது என்பதை மிக எளிதான மரபாக்கிய நாம், இத்தகையோர் உருவாவதற்கான, அவர்களால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ப்பதற்கான வேறு மார்க்கங்கள் குறித்து என்றைக்காவது சிந்தித்துள்ளோமா? மக்களை அரசியல்மயப்படுத்துவதன் மூலமும், அவர்களுடன் பின்னிப் பிணைவதன் மூலமும், சுய பாதுகாப்பு முறைகளை இறுக்கமாகப் பேணுவதன் மூலமும், நேர்மையாக போதிப்பதன் மூலமும், இத்தகைய காட்டிக் கொடுப்பவர்கள், உளவாளிகள் போன்றோர்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து எம்மை பாதுகாக்க முடியுமென்று சிந்தித்துள்ளோமா? சிறி லங்கா அரசின், இந்திய அரசின் மனித உரிமை மீறல்கள், மனித வதைகள் என்பவற்றுக்கு எதிராக தகவல் திரட்டியும், தீவிர எதிர்ப்புகளைத் தெரிவித்தும், வந்திருக்கின்ற நாம் எமது சொந்த அமைப்புகளில் எமது சொந்த மக்களின் மீது மேற்கொண்டு வந்திருக்கின்ற, வருகின்ற மனித வதைகளுக்கு எதிராக என்றாவது நேர்மையான சுய விமர்சனம் செய்திருக்கின்றோமா?

இப்போது எம்மில் பலர் சோர்ந்து விட்டோம், நடந்தவற்றை புரிந்து கொள்ள முடியாமல் பரஸ்பர குற்றச்சாட்டுக்களை முன் வைக்கிறோம், எம்மை நியாயப்படுத்துவதற்கு மற்றவர்களில் தவறை தேடுகிறோம். இவை எல்லாவற்றையும்விட, எமது தவறுகளை புரிந்து கொள்ளாமல், அவை அனைத்தையும் போராட்டத்தின் மீது சுமத்துகின்ற பாரிய அரசியல் தவறை தொடர்ந்தும் செய்து வருகிறோம்.

எனினும் எமது விமர்சனங்கள் அனைத்தையும் மீறி, எமதுதேசத்தின் விடுதலை போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. அரசியல் அரங்கில் யார் இருக்கிறார்கள், யார் இல்லை என்பது பற்றிய வினாக்கள் இன்றி, போராட்டத்திற்கான தமது ஆதரவை மக்கள் இன்னமும் வழங்கி கொண்டே இருக்கிறார்கள். இங்குதான் மக்கள் என்ற மாபெரும் சக்தியின் பரிமாணத்தை, அதன் உயர்ந்த போராட்ட ஆற்றலை நாம் சந்திக்கிறோம். இத்தனை கொடுமைகளுக்கும் இத்தனை இழப்புகளுக்கும் இத்தனை துயரங்களுக்கும் பின்னும் நமது மக்கள் இன்னமும் தம்மை அர்ப்பணிக்கிறார்கள். தமக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை தமக்குள் தேக்கி வைத்திருக்கிறார்கள். அந்த விடுதலைக்காக போராடுகின்றவர்களுக்கு தமது ஆதரவை வழங்குகிறார்கள்.

எனவே, நாம் புதிதாய் சிந்திப்போம். எமக்கு நேர்ந்த அனுபவங்களினால் துவண்டு விழாமல், அவற்றிற்கான காரணங்களை புரிந்து நிமிர்ந்தெழுவோம். முற்றிலும் புதிய போராட்ட சூழலுக்காக போராடுவோம். கருத்து சுதந்திரமும், தேர்வு சுதந்திரமும் செயற்படும் சுதந்திரமும் தடையின்றி பின்பற்றப்பட கூடிய ஒரு அரசியல் தளத்தை உருவாக்குவோம். இவை அனைத்தினதும் ஒன்று குவிப்பில், எமது போராட்டத்தின் புதிய பண்பை, பரிமாணத்தை உருவாக்குவோம், வெளிப்படுத்துவோம். மக்கள், தமது விடுதலைக்காக பங்களிக்க தயாராக இருக்கிறார்கள் என்ற உண்மையை எமது எழுச்சிக்கான அடித்தளமாக கொள்வோம்.

## பெண்கள் மீதான

போராட்டத்திற்கு துரோகமிழைக்கும் குற்றவாளிகள் யாராயிருந்தாலும் அவருக்கு தண்டனையுண்டு. ஆனால் எதிரி பெண் என்பதற்காக வன்புணர்ச்சிக்குள்ளாக்குவது அவருக்கான தண்டனையா?

நமது போராட்டத்தின் எதிரிகளாக செயற்படும் பெண்களாயினும் அவர்களை பெண்களாக மதிக்கக் கற்றுக் கொள்வோம். அது தான் விடுதலை உணர்வுக்கான வகைமாதிரியாகும்.

1987 இல் இந்திய இராணுவத்தின் ஒத்துழைப்புடன் திருகோணமலைப் பிராந்திய ஆண்கள் சிலர் அங்கிருந்த சிங்கள மக்களை அடித்துத் துரத்தினர். அச்சந்தர்ப்பத்தில் சிங்களப் பெண்கள் வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இதை தேசிய உணர்வின் வெளிப்பாடாக யாரும் மன்னித்து செல்ல முயல்வார்களானால் இக்கூரிய ஆயுதத்தின் மறுமுனை அடுத்த கணமே சொந்த தேசத்தின் உள்நோக்கியும் நீட்டப்படுவதை அவர்கள் காணநேரும். ஆண் பாசிசம் (male facism) பெண்களை சிதைப்பதைத்தான் உள்நோக்கமாய்க் கொண்டிருக்கிறதேயன்றி தமிழா சிங்களமா என வகைப்படுத்திப்பார்ப்பதையல்ல.

இன்றுவரையிலும் கூட நமது போராட்ட அரசியலில் வன்புணர்ச்சி என்பது சமூகத்திலிருந்து துடைத்தெறியப்பட வேண்டிய ஒரு குரூரமான வன்முறை எனும் சிந்தனை முழுமை பெறவில்லை. நமது அரசியலுக்கு சார்பானவர் வன்புணர்ச்சியிலீடுபட்ட சமூகவிரோதி என்றாலும் கூட நாம் அவரைப் பாதுகாத்துக்கொள்கிறோம். நமது சமூக ஆண்களால் வன்புணர்ச்சிக்குள்ளான பெண்களை அதிகார வர்க்க நீதிமன்றங்களின் பாணியில் விசாரணை செய்கிறோம். இது எதைக் குறிக்கிறது? நமது சமூகத்தில் புதைந்திருக்கும் ஆபத்தான வன்முறைக் காரணிகளை வேரோடு பிடுங்கியெறிய முயலாத நமது சமூகப் பொறுப்பின்மையைத்தானே காட்டுகிறது.

நமது போராட்டத்தில் இடம் பெறும் பெண்கள் மீதான அதிகாரத்துவமான போக்குகளை நாம் இனங்காண்பதும் விமர்சனத்திற்குள்ளாக்குவதும் நமது போராட்டம் உயர்வான மானுட விழுமியங்களை நோக்கி நடைபோடுவதற்கான இலக்குகளை வகுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்ததன் அடிப்படையிலானதாகும். மாறாக எவரும் இந்த விமர்சனங்களை நமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதற்கோ, நிராகரிப்பதற்கோ உபயோகிப்பார்களானால் அந்த ஈனத்தனமான அரசியலை நாம் கண்டிக்கிறோம்.

நமது இலட்சியம் விடுதலைபெற்ற உயர்மானுட விழுமியங்களைக் கொண்ட சமூகத்தைக் கட்டமைப்பதாகும்.

# அதிகார உறவுகள் !

தமிழீழ விடுதலை போராட்ட வரலாற்றில், ஆயுதப் போராட்ட வடிவமானது முதன்மை நிலையை அடைந்து, இரண்டு தசாப்தங்களாகி விட்டன. நாம் இப்போது இரண்டாவது தசாப்தத்தின் இறுதியில் நிற்கிறோம். இந்த இருபது வருடகால ஆயுதப் போராட்ட அனுபவத்தை வெவ்வேறு கோணங்களில் முறையாக மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

ஒருபுறம், சிறீலங்கா அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டமானது, தேசிய அளவில், எமது மக்களின் அரசியல் உணர்வை விசாலித்திருக்கின்றது, இளைய தலைமுறையினரின் தீவிர அரசியல் பங்குபற்றுகைக்கான தளத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இதுவரை காலமும் அரசியல் இயக்கங்களில் நேரடியாக பங்குபற்றுவதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்த பெண்கள், சாதி ரீதியாக அடக்கப்பட்ட பிரிவினர், விளிம்புநிலை மக்கள்.... போன்ற நமது தேசத்தின் அடிப்படை மக்கள் பிரிவினர்கள், போராட்டத்தில் முக்கிய பாத்திரம் வகிக்க கூடிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது. சர்வதேச அளவில், எமது போராட்டம் தொடர்பான அக்கறையும், கவனமும் ஈர்க்கப்படுவதற்கும் எமது உரிமைகள் குறித்து அழுத்தமான கருத்து உருவாக்கப்படுவதற்குமான நிலைமை தோன்றியிருக்கின்றது.

மறுபுறம், நாம் இருண்ட, சோக நிகழ்வுகளின் பிரதிநிதிகளாக நிற்கிறோம். ஆயுதப் போராட்ட அமைப்புகளினால் நமது மக்களின் உரிமைகளும் உயிர்களும் பறிக்கப்பட்டு வந்திருக்கின்ற திகைப்பூட்டும் அனுபவத்தை சுமந்தவர்களாக இருக்கிறோம். ஒவ்வொரு போராட்ட இயக்கமும் தனது உறுப்பினர்களையே வதைகளுக்கும் கொலைப்பலிக்கும் உள்ளாகி வந்திருப்பதை அறிந்து மௌனமாக குமுறுகிறோம், சகபோராட்ட அமைப்புகளை சேர்ந்தவர்களை, அவற்றின் ஆதரவாளர்களை தீராத கொலைவெறியுடன் அழித்தொழித்த காட்சிகளினால் கலங்கி போயிருக்கிறோம்.

இவை எப்படி சாத்தியமாகின?! சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து, நமது மக்களை, நமது தாயகத்தை விடுவிப்பது, எமக்கென சுதந்திர அரசை அமைப்பது என்ற உயரிய இலட்சியங்களுடன் போராட்டத்தில் பங்குபற்றியவர்கள், தமது சொந்த மக்களையே, சக போராளிகளையே அடக்கி, அழிக்க முடிந்தது நாம் எப்படி புரிந்து கொள்வது?!

இந்த கேள்விக்கான பதிலை நாம் கண்டு கொள்ள வேண்டும். எமது போராட்டத்தை தூய்மைப்படுத்துவதற்காக மட்டுமல்ல, தேசிய மற்றும் சர்வதேச அரங்கில் எமது போராட்டத்தின் உயர் மாண்பு நிரூபிக்கப்படுவதற்கும் நிலைபெறுவதற்கும் இத்தகைய மதிப்பீடு அவசியம். நிகழ்ந்து விட்ட தவறுகளை திறந்த மனத்தோடு மதிப்பிடுவது ஒருதனிநபரின் சிறந்த பண்பு மட்டுமல்ல, ஒருதேசத்தின் உயர்ந்த பண்பும்தான். இந்த வகையில், இத்தகைய நிகழ்வுகள் சாத்தியமாவதற்கு காரணமாக அமைந்திருக்கின்ற எமது சமூக உறவுகளின் பின்புலம் சார்ந்த மதிப்பீடு ஒன்று இங்கு முன்வைக்கப்படுகின்றது.

சமூக அளவில், எமக்கிடையே நிலவுகின்ற உறவுகள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை ஒருமுறை கவனித்து பாருங்கள். எங்கும் அதிகார உறவுகளே வியாபித்திருக்கின்றன என்ற உண்மையை அறிந்து கொள்வோம். ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தும் உறவுகளே எம்மத்தியில் நிலவுகின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்வோம். எமது குடும்பங்களில், மத வழிபாட்டுத் தலங்களில், கல்வி நிலையங்களில், வேலைத் தளங்களில்.... என எங்கும் அதிகார உறவுகளையே காண்போம். பால்ரீதியாக, சாதிரீதியாக, பிரதேச ரீதியாக, வயது சார்ந்து...என நாம் சந்திக்கின்ற, பழகுகின்ற, வாழ்கின்ற அனைத்திலுமே ஏற்றத்தாழ்வுகளும் அதிகார உறவுகளும் மிக இயல்பாக நிலவுகின்றன. மேலும், இவை ஒரு இயற்கையான நிகழ்வுகள் போலவும் அமைந்திருக்கின்றன.

சமூக அளவில், எமக்கிடையே நிலவுகின்ற உறவுகள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை ஒருமுறை கவனித்து பாருங்கள். எங்கும் அதிகார உறவுகளே வியாபித்திருக்கின்றன என்ற உண்மையை அறிந்து கொள்வோம். ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தும் உறவுகளே எம்மத்தியில் நிலவுகின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்வோம். எமது குடும்பங்களில், மத வழிபாட்டுத் தலங்களில், கல்வி நிலையங்களில், வேலைத் தளங்களில்.... என எங்கும் அதிகார உறவுகளையே காண்போம்.

இவ்வாறு ஏற்றத்தாழ்வுகளும் அதிகார உறவுகளும் இயல்பானவையாகவும் இயற்கையான நிகழ்வுகள் போன்றும் அமைந்திருக்கின்ற எமது சூழலில், நாம் இன்னொருவர் மீது அதிகாரம் செலுத்துவதோ, அல்லது எம்மீது, இன்னொருவர் அதிகாரம் செலுத்துவதோ இயல்பான வழக்காகி விடுகின்றது, எவ்வித கேள்விக்கும் உட்படுத்தப்படாத மரபாகி விடுகின்றது. ஒருவரை அதிகாரம் செய்வதற்கு எமக்கு தேவைப்படுவதெல்லாம் அவருடனான உறவில் எமக்கிருக்கின்ற உயர்நிலைதான். அதாவது, நாம் ஆணாக இருந்தால் பெண்ணையும், "உயர்சாதியை" சேர்ந்தவராயின் "தாழ்ந்த" சாதியை சேர்ந்தவரையும், அதிகாரியாயின் எமக்கு கீழுள்ளவர்களையும், முதலாளியாயின் தொழிலாளிகளையும், வயதில் மூத்தவராயின் இளையோரையும் அதிகாரம் செய்வது எளிதாக சாத்தியமாகின்றது. இதை விரித்து செல்வோமாயின், நாம் ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பை சேர்ந்தவராயின், எமது கைகளில் ஆயுதங்கள் இருப்பின் எமக்கு வெளியேயுள்ள அனைவர் மீதும் அதிகாரம் செலுத்தலாம் என்ற தர்க்க ரீதியான முடிவை பெறுவோம்.

இவ்வாறு, அதிகார உறவுகள் சமூக வழமையாக்கப்பட்டிருக்கின்ற ஒரு மரபில், ஒவ்வொருவருமே மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்தவதற்கும் மற்றவர்களை அடக்கி வைப்பதற்குமான ஆர்வத்தை பெறுகிறார்கள். தமக்க கிடைக்கின்ற சிறிய சந்தர்ப்பத்தையும் கூட, தமது அதிகாரத்தை பேணுவதற்குப் பயன்படுத்த முயற்சிக்கிறார்கள். அதிகார முறைமைக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் கூட, அதிகாரப்படிநிலை ஒழுங்கில் தமது நிலை உயரும்போது, தாமே அதிகாரத்தை பிரயோகிப்பவர்களாக மாறி விடுகிறார்கள். இதுவரை காலமும் சாதி ரீதியாகவும், பால் ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் வயது ரீதியாகவும் அடக்கப்பட்டிருந்தவர்கள் ஆயுதப் போராட்ட அமைப்புகளில இணைந்து கொண்டதுமே, தமக்கு வெளியில் உள்ள அனைவர் மீதும் அதிகாரம் செலுத்துபவர்களாக மாறி விடுவதை இத்தகைய பின்புலத்தில் நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஆயுதப் போராட்ட அமைப்புகள் எதுவும், நமது சமூகத்தில் நிலவி வருகின்ற இத்தகைய அதிகார உறவுகளுக்கு எதிராக போராடவில்லை என்பது மட்டுமல்ல, தமது அமைப்புகளிலும் கூட இத்தகைய அதிகார உறவுகள் ஏற்படாமல் தடுப்பதற்கும் முயற்சிக்கவில்லை. மாறாக, இந்த அமைப்புகள் அனைத்திலும் நமது சமூகத்தில் நிலவுகின்ற அத்தனை அதிகாரப்படிநிலை உறவுகளும் இன்னும் இறுக்கமாக பின்பற்றப்பட்டன, பின்பற்றப்படுகின்றன. பதவிகளும், அதிகாரங்களும் பால் ரீதியாகவும் பிரதேச அடிப்படையிலும, சாதி அடிப்படையிலும் வேறுபிரித்து வழங்கப்படுகின்ற போக்கு சகல போராட்ட அமைப்புகளிலும் நிலவியது, நிலவுகின்றது. ஆங்காங்கே சில விதிவிலக்கான நிகழ்வுகள் இடம்பெற்ற போதிலும், ஒட்டுமொத்தமாக, நமது சமூகத்தில் நிலவுகின்ற அதே அதிகார உறவுகளே, ஆயுதப்போராட்ட அமைப்புகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஒரு ஆக்கிரமிப்பு படைகளில் காணப்படுகின்ற அதேவகையான அதிகார உறவுகளும் அடக்குமுறை மனோபாவங்களும், விடுதலைக்காக போராடுவதாக சொல்லி கொள்கின்ற அமைப்புகளிலும் நிலவுகின்ற முரணை இங்கு நாம் தெளிவாகக் காண்கிறோம்.

எனவே, தமிழீழ விடுதலை போராட்ட அமைப்புகள் மக்கள் மீது அதிகாரத்தையும் அடக்குமுறையையும் மேற்கொள்வதற்கான காரணங்களை, அந்த அமைப்புகளுக்குள் மட்டும் நாம் தேட கூடாது. ஒவ்வொரு அரசியல் நிறுவனமும், சமூகத்தின் ஒரு கூறு என்பதையும், அதன் உறுப்பினர்கள் அனைவரும் அந்த சமூகத்தை சேர்ந்தவர்களே என்பதையும் புரிந்து கொள்வோமாயின், எமது அரசியல் நிறுவனங்கள் அனைத்திலும் நிலவுகின்ற அதிகார பண்பானது, சாராம்சத்தில் எமது சமூகத்தில் நிலவுகின்ற அதிகார உறவுகளின் மையப்பட்ட, திரண்ட வடிவம் தான் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

நாம் ஒரு புதிய சமூக அமைப்பை கட்டியெழுப்ப விரும்புகிறோமாயின், முற்றிலும் புதிய பாதையில் பயணிக்க விரும்புகிறோமாயின், எமது அரசியல் நிறுவனங்கள் மட்டுமல்ல, எமது சமூகம் முழுவதுமே அதிகார பண்பிலிருந்து விலக வேண்டிய அவசியத்தை கொண்டிருக்கின்றோம். சிறீலங்கா அரசுக்கு எதிரான எமது போராட்டமும் அர்ப்பணிப்புகளும் அதன் ஆதிக்கத்திலிருந்து எம்மை விடுவிப்பதுடன் மட்டும் எல்லைப்பட்டு விட கூடாது. நாம் உருவாக்க விரும்புகின்ற புதிய சமூகமானது, இன்று நிலவுகின்ற அதே அதிகார உறவுகளை, அப்படியே மறுபதிப்பு செய்வதாக அமைய கூடாது. சூக்குமமான கோஷங்களின் பின்னே, எமது நலன்கள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள்...என்பவை மங்கி, மறைக்கப்பட்டு விடகூடாது.

எனவே, நாம் தெளிவாக இருப்போம்: சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து மட்டுமல்ல, எமது சொந்த ஆதிக்க மரபுகளிலிருந்தும் நாம் சுதந்திரமடைய விரும்புகிறோம் என்பதில், சகலவிதமான அதிகார உறவுகளிலிருந்தும் எம்மை விடுவித்து கொள்ள விரும்புகிறோம் என்பதில், எமக்கிடையே பரஸ்பர மரியாதையுடன் கூடிய உறவுகளையே பேண விரும்புகிறோம் என்பதில், முற்றிலும் சமத்துவமான உறவுகளையே எம்மத்தியில் நிலைநாட்ட விரும்புகிறோம் என்பதில் தெளிவாக இருப்போம்!

# காஷ்மீரம்: காஷ்மீர் மக்களுக்கே!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மீண்டும் ஓர் போர் நிகழ்வதற்கான அபாயம் தவிர்க்கப்பட்டு விட்டது என்ற ஆசுவாசம் உபகண்டத்தில் ஏற்பட்டுள்ளது. அணு ஆயுத முகாமுக்குள் புதிதாக நுழைந்துள்ள இந்த இரு "இளம்" நாடுகளுக்கும் இடையே போர் மூளுமாயின், அது பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் என் பலர் அஞ்சியது உண்மையே.

இப் பத்தியின் நோக்கம் இந்த இரு நாடுகளையும் பற்றியதல்ல. மாறாக இந்த இரு நாடுகளுக்கிடையிலும் அகப்பட்டு தமது சுயநிர்ணைய உரிமைக்காகவும் தேசிய விடுதலைக்காகவும் போராடிக்கொண்டிருக்கும் ஜம்மு-காஷ்மீர் பற்றியதாகவே இருக்கும். இத் தேசம் மற்றும் அதனது விடுதலைப்-போராட்டம் தொடர்பான எம் தேசத்தின் நிலைப்பாடு என்ன? இந்த நிலப்பாட்டிலிருந்தே நடைபெறும் யுத்தம் தொடர்பான ஒரு நிலைப்பாட்டிற்கு வருவது பொருத்தமானதாக இருக்கும்.

காஷ்மீர் மீது இந்தியா கடந்த இருபது வருடங்களில் முதற்தடவையாக குண்டுகளைப் பொழிகின்றது. இதற்கான புதிய ஆரம்பம் இந்திய விமானங்கள் இரண்டு மே 28ம் திகதி சுட்டவிழ்த்தப்பட்டதில் இருந்து ஆரம்பிக்கின்றது. காஷ்மீர் கெரிலாக்கள் பாகிஸ்தானின் இராணுவம் என்பனவற்றின் உதவியுடன் இந்திய எல்லைக்குள் ஊடுருவியுள்ளார்கள் என்பதே தனது இராணுவத் தாக்குதலை நடத்துவதற்கான காரணமாக இந்திய அரசு முன்வைத்துள்ளது. இது காஷ்மீர் தொடர்பாக மூன்றாவது யுத்தமொன்று இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் இப்பிரதேசத்தில் நடப்பதற்கான அறிகுறிகள் தெரிவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஒரு பிரதேசம் தொடர்பாக இரு நாடுகளுக்கிடையில் யுத்தமொன்று நடக்குமளவிற்கு இருக்கும் பிரச்சனைதான் என்ன?

இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரத்தை பிரிட்டனிடமிருந்து பெற்ற பொழுது காஷ்மீர் பிரதேசம் தொடர்பாக எவ்விதமான முடிவும் இருக்கவில்லை. இருப்பினும் இரு நாட்டினதும் அன்றைய பிரதமர்களான நேருவும் ஜின்னாவும் காஷ்மீர் முழுமையான சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான உரிமையை உடையவை என்பதை தனித்தனியே வெவ்வேறு அறிக்கைகளில் ஏற்றிருந்தனர். இந்தியா தனது இராஜதந்திரத்தைப் பயன்படுத்தி காஷ்மீர் மாகாராஜா ஸ்ரீரி சிங்கிடமிருந்து காஷ்மீர் பிரதேசத்தை ஆளும் உரிமையைப் 1947ம் ஆண்டு செய்த ஒப்பந்தம் ஒன்றின் மூலமாக பெற்றுக் கொண்டது. இதற்கு முதல் மகாராஜா காஷ்மீர சுதந்திரமாக இருப்பதையே விரும்பியிருந்தார். இதன்பின் காஷ்மீர் பிரதேசங்களுக்கு உரிமை கொண்டாடிய இரு நாடுகளும் 1947-8 இலும் 1965 இலும் இரு யுத்தங்களை மேற்கொண்டன.

இந்த யுத்தத்தின் பின் யுத்தமற்ற பிரதேசம் என்றும் இரண்டாவது யுத்தத்தின்பின் முதலாவது உடன்பாட்டில சிறு மாற்றங்களைச் செய்து கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஒன்றை உருவாக்கிக் கொண்டனர். இவ்வாறு காஷ்மீரை இந்தியாவும் பாக்கிஸ்தானும் பங்கு போட்டுக் கொண்டனர். இதில் மூன்றில் இரண்டுபங்கு பிரதேசம் இந்தியாவிற்கும் மூன்றில் ஒரு பங்கு பிரதேசம் பாகிஸ்தானும் கொண்டுள்ளது. கம்யூனிஸ(?) சீனாவும் தனக்கும் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. காஷ்மீர் ஐந்து மாநிலங்களைக் கொண்ட காஷ்மீரில் அசாட் (விடுவிக்கப்பட்ட) காஷ்மீர், கிளைட்-பால்டிஸ்டான் என்ற இரு மாநிலங்களும் பாகிஸ்தான் வசம் உள்ளது. இங்கு வாழும் மக்கள் அனைவரும் முஸ்லிம்கள். மக்களின் தொகை மூன்று மில்லியன். காஷ்மீர வலி, ஜம்மு, லடாக் ஆகியன இந்தியா வசம் உள்ளது. இந்திய அரசின் கீழுள்ள மாநிலங்களிலேயே (அறுபது விதமான) முஸ்லிம்கள் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாநிலம் இதுவாகும். இங்கு வாழும் மக்களின் தொகை ஒன்பது மில்லியன் ஆகும்.

காஷ்மீருக்கு உரிமை கொண்டாடும் இரு நாடுகளும் தமக்கான நியாயப்படுத்தல்களை தமது தரப்பில் முன்வைக்கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை ஜம்மு-காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி. அதுமட்டுமின்றி அதன் மகாராஜா ஒப்பந்தம் மூலம் தமக்கு அதன் உரிமையை தந்துள்ளார். பாகிஸ்தானைப் பொறுத்தவரை முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசம். ஆகவே இது தமக்கு உரிமையானது. ஆக இந்த இரு நாடுகளையும் பொறுத்தவரை இது ஒரு எல்லைப் பிரச்சனை.

காஷ்மீர மக்களைப் பொறுத்தவரை இது தமது தேசத்தின் சுதந்திரம் தொடர்பான பிரச்சனை. தமது தேச விடுதலைக்காகவும் சுயநிர்ணைய உரிமைக்காகவும் உறுதியான போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். இவர்களின் விடுதலைப் போராட்டம் 1989ம் ஆண்டின் பின் மிகவும் தீவிரமடைந்தது. ஆயுதக் குழுக்களில் இணைவோரின் தொகை முன் எப்போதுமில்லாதவாறு அதிகரித்தது. பல்வேறு குழுக்கள் இந்திய அரசிற்கு எதிராக போராடுகின்றனர். இதில் ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி இருபது வருட கால வரலாற்றைக் கொண்டது. இன்று தனது சக்தியை இழந்து வருவதாகக் கருதப்படுகின்றது. இவர்களை விட மூன்று பிரதானக் குழுக்கள் பாகிஸ்தானில் தளங்களை அமைத்துச் செயற்படுகின்றன.

ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் அமனுல்லாகான் பத்திரிகைச் செய்தியொன்றில் குறிப்பிட்ட போது, காஷ்மீர சுதந்திரமானதும் சுயநிர்ணய உரிமையையும் கொண்ட, கர்ஷ்மீர் மக்களுக்கேயுரிய ஒரு தனியான நாடாகும். இது ஜனநாயகம், இனவாதமின்மை, பால்வாதம், மற்றும் சமயங்கள் தொடபாகவும் நியாயமாகவும் சமத்துவமாகவும் நடந்துகொள்ளும். அயல் நாடுகளான இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் சமத்துவமான அடிப்படையில் நட்புறவை பேணும். இவ் விடுதலைப் போராட்டக் குழுக்களில் இரு பிரதான போக்குகள் காணப்படுகின்றன. முதலாவது போக்கு, காஷ்மீர அயல் நாடுகள் இரண்டுடனும் இணையாது தனியான ஒரு நாடாக இருப்பது. இரண்டாவது போக்கு, பாகிஸ்தானுடன் இணைவது. இவ்வாறான பிரதானமான இரு போக்குகளைக் இவ் விடுதலைப் போராட்டக் குழுக்கள் கொண்டிருந்தபோதும் பல குழுக்கள் இணைந்து ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்கி செயற்படுகின்றனர்.

தாம் பூரண இறைமை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். தமக்கென தனி ஒரு நாடாக காஷ்மீர் இருக்க வேண்டும் என்பதே, ஜம்மு-காஷ்மீர் விடுதலை தொடர்பான இம் மக்களின் நிலைப்பாடு. இந்தியன் நெஷனல் வீக் சஞ்சிகையின் கணிப்பிட்டின்படி எழுபத்தியிரண்டு சதவீதமான மக்கள் மேற்குறிப்பிட்ட நிலைப்பாட்டிலையே உள்ளனர்.

இந்த வகையில், காஷ்மீர் மக்களின் நிலைப்பாடே, எமது நிலைப்பாடும் ஆகும். எமது தேசத்தைப் போலவே தொடர்ச்சியாக அடக்கபபட்டுவரும் தேசம் என்றடிப்படையிலும், தேசவிடுதலைப் போராட்டத்தை தீவிரமாக முன்னெடுப்பவர்கள் எனறடிப்படையிலும் எமது வாழ்த்துக்களையும் ஒருமைப்பாட்டையும் அவர்களுக்குத் தெரிவிப்போம்.

## வன்னியில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிற்க வேண்டும். எமது தேசத்தை தனிமைப்படுத்தி பலவீனப்படுத்த முடியாதபடி சக தேசங்களினதும் சர்வதேச சமூகங்களினதும் ஆதரவில் எமது போராட்டமும் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்கான திசையில் முரணற்ற விதத்தில் போராட்ட வழிமுறையில் மாற்றம் அவசியமாகிறது.

மேற்படி அவலங்களையிட்டு நாம், கலங்கிடத் தேவையில்லை. காரணம் இந்த அவலங்களையும் தாங்கி நமது மக்கள், போராட்டத்துக்கு ஆற்றும் பங்களிப்பு இதுவாகும் எனப்புரிந்து கொண்டால்.

ஒரு புறம் அடக்கப்படும் நமது தேசம் தன்னளவில் இந்தவிதமான பொருளாதாரத் தடைகளை உள்ளார்ந்த தனது தயாரிப்புகளின் மூலம் எதிர்கொள்ள வேண்டும். மறு புறம், சர்வதேச அளவில் பலமான தொடர்ச்சியான போராட்டங்களை பொருளாதாரத் தடைக்கு எதிராக நடத்தப்பட வேண்டும். சிங்கள அரசையும் அதன் இன அழிப்பு அடக்குமுறை வடிவங்களையும் அம்பலப்படுத்தி அரசை தனிமைப்படுத்த வேண்டும். குறிப்பாக இன்றைய சூழலில் புலம்பெயர்ந்த நாடுகளில் தமது சொந்த மக்களுக்காக தன்னெழுச்சிப் போராட்டங்கள் பல வெடித்து, பொருளாதாரத் தடைக்கு எதிராக சர்வதேச சமூகத்தின் ஒருமித்த ஆதரவை பெற்றுக் கொள்வதற்கு குரல் கொடுக்க முடியாத அளவிற்கு நமது போராட்ட உணர்வுகள் மங்கிப் போவது ஒரு ஆபத்தான போக்காகும். இப்போக்கானது, கூடிய விரைவில் மாற்றப்பட வேண்டும். தேசிய விடுதலைக்காகப் போராடும் பல்வேறு சக்திகளினதும், கூட்டுக்கடமை இதுவாகும். இந்தத் திசையில் எமது போராட்டமும் வழிமுறைகளும் புதுப்பரிமாணம் பெற வேண்டும். இந்த திசையில் தேசம் மீண்டும் காலடி எடுத்து வைத்துள்ளது.

## அரசுக்கு எதிராக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மாதங்களில் தமிழ் ஆசிரியர்கள் முன்வைத்த நியாயமான கோரிக்கைகளில் ஒன்று மட்டும் பொதுவான ஐக்கியப்பட்ட போராட்டங்களில் பலவீனப்படுத்தும் அம்சத்தைக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றிகரமாக நடந்துமுடிந்த ஆசிரியர் சங்கங்களின் போராட்டத்தில் இருந்து நாம் பல படிப்பினைகளைக் பெற்றுக்கொள்வது போல, எதிரிகளும் அவர்களைச் சார்ந்து நிற்கும் அதிகாரத்துவக் கூட்டங்களும் கூட தம்மளவில் படிப்பினைகளைப் பெற்று எதிர்காலத்தில் இப்படியான போராட்டங்களை நசுக்குவதற்கும் பலவீனப்படுத்துவதற்கும் முயல்வார்கள் என்பதிலும் நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

சமூகங்களை விற்றுப் பிழைக்கும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் இரு தரப்பிலும் உள்ளனர். இவர்களின் வஞ்சகத் திட்டங்களுக்குள் நாம் வீழ்ந்து விடக்கூடாது. இவர்களால் கிடைக்கும் அற்ப சலுகைகளுக்காக, எப்போதுமே உரிமைகளைப் போராடிப் பெறவேண்டியவர்களாகிய நமக்குள் பிளவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் விதத்தில் எமது நகர்வுகள் அமையக் கூடாது. பிளவுகள் ஏற்படுவதற்கான மனோபாவங்கள் உருவாகவும் வளரவும் நாம் அனுமதிக்கக்கூடாது.

'The Editor'
BM Box 4002
London. WC1N 3XX
United Kingdom

www.thamileelam.org

## மக்களின் பலத்தில்....

புரட்சிகர வணக்கங்கள்!

"தமிழீழம்" பத்திரிகை, நமது தேசத்தின் மத்தியில் திடமாக தன்னை நிலைப்படுத்திக்கொண்டு வருகின்றது.. தனது தொடர்ச்சியில் மட்டுமல்ல, அரசியல் தரத்திலும் "தமிழீழமானது" முன்னேறி வருகின்றது என்பதை உங்களிடமிருந்து வருகின்ற விமர்சனங்கள், ஆதரவுகள்.... என்பவற்றினூடே நாம் தெளிவாய் புரிகின்றோம்.

தமிழீழ மக்கள் கட்சி, தன்னை தமிழ்தேசத்தின் புரட்சிகர அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்திய இந்த குறுகிய நான்கு மாதகாலத்திற்குள், அதன் அரசியல் வெளிப்பாடுகளில் ஒன்றான "தமிழீழம்" பத்திரிகை சரியான இலக்கை நோக்கி செல்வதை நாம் அறிகிறோம். எந்த மக்களின் அரசியல் சாரமாக, அரசியல் ஆன்மாவாக அமைய வேண்டுமோ, அந்த மக்களின் அங்கீகரிப்புக்கும் ஆர்வத்திற்கும் உரிய பத்திரிகையாக "தமிழீழம்" அமைந்து விட்டது என்ற உண்மை, நமது விடுதலைப் போராட்டத்தில் புதிய திசையை ஒளிர்விப்பதாய் உள்ளது. ஆம்! நமது தேசத்தின் புரட்சிகர பிரிவினர்களான கூலிஉழைப்பாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அரசாங்க ஊழியர்கள், பெண்கள், இளைஞர்கள், மற்றும் புலம் பெயர்ந்தோர்... என அனைத்து மக்கள் மத்தியிலும் "தமிழீழம்" ஊடுருவியுள்ளது.

தளத்தில், மிகவும் இறுக்கமான சூழல்களில், தமக்கு ஆபத்துக்கள் ஏற்படலாம் என்ற நிலைமை இருந்தும். "தமிழீழத்தை" வாசிப்பதிலும் அதை மற்றவர்கள் வாசிக்கும்படி செய்வதிலும் நீங்கள் காட்டி வருகின்ற அக்கறை, ஒரு விதத்தில் மிகப்பெரிய அரசியல் பணி என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்வோம். நமது போராட்டம் தொடர்பான மதிப்பீடுகள், புதிய கண்ணோட்டம், புதிய திசைவழி....என்பவற்றை உருவாக்குவதில் நீங்கள் காட்டுகின்ற ஆர்வமும், அக்கறையும், வழங்குகின்ற பங்களிப்பும் நமது தாயகத்தில் மக்களின் அரசு ஒன்று உதயமாகும் என்பதை நிட்சய வலிவுடன் உணர்த்துகின்றன.

நமது போராட்டக்களத்தில் நோய்கூறுகளாக் நீடித்து வரும் அதிகாரத்துவ உறவுகள், மனிதவதைகள், வன்புணர்ச்சிக் குற்றங்கள் என்பவற்றை நம் மத்தியில் இருந்து களைவதிலும், இவற்றின் பின்னால் செயற்படும் மோசமான உளவியலை அம்பலப்படுத்துவதிலும் மக்களின் கவனத்தையும் பங்களிப்பையும் ஈர்க்க வேண்டியது நமது கடமையாகும்.

சர்வதேச அளவில் இன்று பல்வேறு வடிவங்களில் தேசிய விடுதலை போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இப்போராட்டங்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவது எமது கட்சியின் புரட்சிகர சர்வதேச கடமையாகும். உலகளவில் புரட்சிகர ஒருமைப்பாட்டை உருவாக்குவதை நோக்கி முன்னேற உறுதி பூணுவோம்.

## மக்கள் களம்

### அரசியல் திட்டம் சம்பந்தமாக .....

1.சிறீலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள் என்றும் அனுமதிக்கப்பட முடியாதவை. தமிழ்பாரம்பரியத்தையும் அதன் தொடர்ச்சியினையும் கூறுபோட அரசுமேற்கொன்ட திட்டமிட்ட சதிநடவடிக்கையே இச்செயல்திட்டமாகும். மேலும் இங்கு குடியமர்த்தப்பட்டவர்கள் நாடோடிகளோ, நிலமற்றவர்களோ அல்லர். இவர்கள் பாரம்பரிய சிங்களப்பகுதியில் இருந்து திட்டமிட்டரீதியில் குடியமர்த்தப்பட்டவர்கள், இவர்களை குடியமர்த்தியபோதோ அதன்பின்போ இவர்களுக்கு உன்மை நிலைமை நிச்சயமா தெரிந்திருக்கவேண்டும், எனவே இம்மக்கள் தொடர்ந்தும் நிலை கொன்டுள்ளமை இம்மக்களின் மனநிலையிலும் ஆக்கிரமிப்புதன்மை இருப்பதையே வெளிப்படுத்துகிறது. ராணுவ பாதுகாப்புடன் இன்றும் வாழ்ந்துவரும் இம்மக்கள் போராட்ட அமைப்புகளால் சில இடங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை தொடர்ந்து தங்களின் தாயகப்பகுதிக்கு நகர்ந்தமையும் வரலாற்றில் உள்ளது.

எனவே இந்த சிங்களக்குடியேற்றங்களை அகற்றுவதில் எவரும் காத்திருக்கவோ, மறுபரிசீலனை செய்யவோ தேவையில்லை. இது எமது தேசியவிடுதலைப் போராட்டத்தின் ஒரு அங்கம் சென்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த கட்சியின் அரசியல் திட்டத்தில் குறிப்பிட்டபடி ஒரு கால வரையறையின் பின் வாழ்கிற சிங்களவர்கள் என்ற பதம் பொருத்தமற்றதாகும். எமது தாயகத்தில் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களையும் ஆக்கிரமிப்பாளர்களையும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழீழப் பகுதியில் பாரம்பரியமாக இருந்துவரும் சிங்களவர்களையும் தமிழீழத்தை தமது தாயகமாக ஏற்றுவரும் எல்லைப்புற சிங்களவர்களையும் நாம் அனுமதித்தாலும் மேற்படி ஆக்கிரமிப்பாளர்கள் மன்னிக்க முடியாதவர்கள், எனவே இதனை திட்டத்தில் தெளிவாக வரையறுக்க வேண்டும்.

2. தமிழீழத்தில் சாதியம் ஒரு சாபக்கேடு. ஒரு பிரிவு மக்கள் இன்னொரு பிரிவு மக்களால் பொருளாதார, கலாசார ரீதியில் உளவியல் ரீதியிலும் ஆதிக்கம் செலுத்தும் தன்மை காணப்படுகிறது. திட்டத்தில்சாதி ரீதியிலான சகல ஒடுக்கு முறைகளும் தீர்வு காணப்படும்என்று கூறப்பட்டுள்ள போதும் இது திருப்தி தருவதாக இல்லை. அன்றாட வாழ்க்கையில் இம்மக்கள் எதிர் நேக்கும் பிரச்சனைகள் சட்ட ரீதியாகவும் நடைமுறைரீதியாகவும் தீர்க்கப்படும் என உத்தரவாதப்படுத்தல் வேண்டும். இந்தச்சந்தர்பத்தில் போராட்ட அமைப்புகள் அனைத்தும் ஒரு வெட்டியோடல் நிலையையே கொன்டுள்ளமையும் இங்கு நினைவுபடுத்தலாம். எனவே இப்பிரிவு மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் எந்த எந்த மட்டத்தில் சட்டரீதியாக தடுக்கப்படும் என்பது வரையறுக்கப்படவேண்டும். உதாரணமாக:- ஆலயத்தில் அனைவரும் சமமாக வழிபாடு நடாத்தவும், தமது நேத்திகடன்களை வேறுபாடின்றி நிறைவேற்றுவதற்கான ஒழுங்குகள், பொதுக்கிணறுகளை பயன்படுத்தும் உரிமை , காதலர்கள் விரும்பியபடி திருமணம் செய்யும் உரிமை, பொதுநிகழ்வுகளில் பேதமின்றி கலந்துகொள்ளும் தன்மை, பொருளாதார ரீதியில் பாதுகாப்பு போன்றவை சட்ட ரீதியிலாக பாதுகாக்கப்பட வேண்டும். இதனைத் திட்டம் தெளிவாக வெளிப்படுத்தவில்லை. இது கூட வெட்டியோடலாக அமையலாம்.

இவற்றைவிட நடைமுறையில் நாம் புதிய பிரச்சினைகளையும் இனம்காணவேண்டி வரலாம், என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள். எனவே அத்திருத்தங்களையும் உள்வாங்க கூடிய நிலையில் எமது திட்டம் அமைதல் வேண்டும்.

திருமலை- கனகு

### [illegible]

தேசம், தேசியவாதம், தேச விடுதலைஎனும் கருத்தாக்கங்கள் என்பன இன்று உலக அரங்கில் மிகவும் விவாதத்துக்குரியனவாயுள்ளன. இவை தொடர்பாக பலரும் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களை முன்வைக்கின்றனர். மரபார்ந்த மார்க்சிய அரசியலாளர்கள், தோழர் ஸ்டாலினால் முன்வைக்கப்பட்ட வரையறைகளையே தேசம் பற்றிய சரியான வரையறையாக இன்றுவரையிலும் உயர்த்திப் பிடித்துவருகின்றனர். தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறைகள் ஒரு மக்கள் சமூகம் தேசமாக பரிணமிப்பதென்றால் அதற்கென தனித்துவமான மொழி பாரம்பரியப் பிரதேசம் சொந்த பொருளாதாரம், கலாசார வாழ்வு ஆகியனவற்றை கொண்டதாயிருக்க வேண்டுமென்கிறது. இத்தகைய ஒரு மக்கள் சமூக தேசமே தனக்கான தனியரசுக்கான உரிமையைக் கொண்டதாகும் என வரையறை செய்கிறது. அப்படியானால் இந்த வரையறைக்குள் அடங்காத மக்கள் சமூகங்களின் தலைவிதி என்ன?

கடந்த நூற்றாண்டுகளில் நடைபெற்ற தேச உருவாக்கங்களும் சுதந்திரமான புதிய தேச அரசுகளின் தோற்றமும் தமக்கான பொதுச் சந்தையை நோக்கமாகக் கொண்டிருந்தன. இது அன்றைய தேச உருவாக்கத்தின் பொது நிகழ்வுப்போக்காயிருந்தது. இதன் காரணமாக தேச அரசு தேசியவாதம் என்பன முதலாளித்துவத்தின் தேவைகளிலொன்றாக அன்றைய மார்க்சியவாதிகளால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டன. எனினும் இன்றைய கட்டத்தில் உலகில் நடைபெறும் தேச உருவாக்கங்களும் தேச அரசுகளின் தோற்றமும் ஆக்கிரமிப்பிற்கும் அடக்குமுறைக்கும் எதிராக விடுதலை கோரும் மக்களின் தேவைகளிலொன்றாயுள்ளன. எதுவும் பரிணாமத்திற்குள்ளாவது போல் தேசியவாதம் பற்றிய வரைவிலக்கணங்களும் பரிணாமத்திற்குள்ளாகின்றன.

தமக்கான பொதுவான வரலாற்று உணர்வையுடைய மக்கள் சமூகம் தேசமாக உருப்பெறுகிறது என்பதே தேசம் பற்றிய நவீன சிந்தனையாகும். இந்த வரலாற்று உணர்வு என்பது அம்மக்களின் பொதுவான அனுபவங்கள் மற்றும் துயர்களைப் பற்றிய அவர்களின் அரசியல் விழிப்புணர்வே. தமிழ் அரசியலாளர்கள் மத்தியில் தேசம் என்பது பொதுவாக பிரதேசத்தையே குறிப்பதாக அர்த்தப்படுத்தப்பட்டு வருகிறது. இது உண்மையில் தவறான புரிதலேயாகும். தேசம் என்பது நில எல்லைகளையல்ல அது மக்களை சுட்டும் பதமாகும்.

-தேசம் பற்றிய சிந்தனையை பிரதேசத்துடன் குறுக்கக்கூடாது.

-தேச அரசை அமைப்பது என்பது தேசத்தின் உயர்ந்த செயற்பாடாகும். தேச விடுதலை என்பது அதன் முழுமையான அர்த்தத்தில் தேச மக்கள் அனைவரினதும் அகரீதியான விடுதலையாயுமுள்ளது. சமூக விடுதலையுடன் தொடர்புபட்டது.

-முழுமையான அர்த்தத்தில் தேச விடுதலை என்பது தன்னளவில் இறைமையுடைய தேச அரசை அமைப்பதை குறிக்கிறது. இத்தகைய தேசம், தேச அரசு எந்நிலையிலும் அந்நிய ஆதிக்கங்களுக்கும் பணியாத சுயாதீனத்தை சுயத்தை ஒரு போதும் இழக்க முன்வராததை குறிக்கிறது.

-ஏகாதிபத்தியத்துக்கு அடிபணியாத ஏகாதிபத்திய வல்லாதிக்க எதிர்ப்புடைய அரசியல் சமூகத்தைக் குறிக்கிறது.

நாதன்-கொழும்பு

லண்டன் தொடர்புகட்கு :
BM BOX 6769
LONDON WC1 3XX
TEL: 0704 137 2064